# மொட்டும் மலரும் - 2016

## கவிதைத் தொகுப்பு

## தொகுப்பு - II


தொகுப்பு ஆசிரியர்கள்:

சிவநெறிச் செல்வர். **சித்தாந்த ரத்தினம்**

**சு. சிவன்பிள்ளை,** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.

கவிஞர் தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்**



வெளியீடு:

**கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை**

நீதிமன்றச் சாலை, பட்டேல் பில்டிங் மாடி,

நாகர்கோவில்.

அலைபேசி எண் : **9442079005**

நூல் தலைப்பு : **மொட்டும் மலரும்**

பொருள் : கவிதைத் தொகுப்பு

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : 2016

புள்ளி விபரம் : 11

வெளியிட்ட நாள் : 13-08-2016

உரிமை : கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை

தொகுப்பாசிரியர்கள் : **சு. சிவன்பிள்ளை** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.
கவிஞர். தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்**

பதிப்பகம் : கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை

பிரதிகள் : 1000

பக்கங்கள் : 90

நன்கொடை : 100/-

அச்சாக்கம் : நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்
67/1 கோர்ட்ரோடு, நாகர்கோவில்-1.
Ph. : 04652 - 233853

முகப்பு அட்டை
வடிவமைப்பு : ஓவியர் **S. தாணுமூர்த்தி, M.A.**
ஈரோடு.

ISBN No. : 978-81-907560-3-7

# என் உரை

இதோ....
உங்கள்
கரங்களில் தவழும்
எங்கள்
மொட்டும் மலரும்
மீண்டும் மலர்ந்தது
மணம் தந்தது.
இது...
ஈராறில் ஈன்ற
இன்னமுதம்
இதில்
உங்கள்
அல்லிக் கவி அரும்புகள்
அருங் கவிகள் படைப்புகள்
இதுதான்
எங்கள்
மொட்டும் மலரும் தொகுப்பு
நற்கவி முவர்க்கு
நாங்கள் வழங்குவதோ
பணமுடிப்பு
உங்கள் கவிதைகள்
கட்டித் தங்கம்
அவை வெட்டித் குவித்தால்
எட்டுக் கோட்டை
உங்கள் கவிதை
பத்தரைமாத்து தங்கம்
இத்தரை போற்றும் வங்கம்
நீங்கள்
தாகூர் வழிவந்த
கோஹினூர் வைரம்
ஆம் கோஹினூர் வைரம்
மல்லிகை மலர்த்தோட்டம்
அங்கு
வண்டுகளின் கூட்டம்
வட்டமிடும் வண்டுகள்
பட்டமிடும் பட்டாம்பூச்சிகள்
வண்டுகளின் ரீங்காரம்
என்னே சிங்காரம்
மலர்மீது வண்டு
அது மதுவுண்டு
கொண்டது மயக்கம்
மகரந்தத் தூக்கம்
மறுநாள்
பொழுது புலர்ந்தது
பூவும் மலர்ந்தது
பொன்வண்டு பறந்தது
கவியது
கொண்டு சென்றது
புவியெங்கும் பொழிந்தது
அவை
இலைநுனியில் ஒளிர்ந்தது
வைரம்போல் ஜொலித்தது.



இவண்
கவிஞர் தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்,**
மேலாண்மை இயக்குநர்,
கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை,
நாகர்கோவில்.

# உள்ளடக்கம்


| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | P. ராஜ்பார்த்திபன் | 7 |
| 2. | கவிஞர் கே.பி. பத்மநாபன் | 8 |
| 3. | கவிஞர் க. வேலுச்சாமி | 9 |
| 4. | பாவலர் எட்வின் நெல்சன் புரட்டாடோ | 10 |
| 5. | கவிஞர் த. கருணைச்சாமி | 11 |
| 6. | பாவலர் இரா.கு. அரங்கசாமி | 13 |
| 7. | பாவலர் வ. விஜயலட்சுமி | 15 |
| 8. | கவிஞர் K. கிருஷ்ணன் | 16 |
| 9. | ப. புவன கிருபாதேவி | 17 |
| 10. | கவிஞர் ம. மயில் இளந்திரையன் (3-ஆம் பரிசு பெற்ற கவிதை) | 18 |
| 11. | மதுரை க. பாண்டியன் | 20 |
| 12. | இரா. மாரியப்பன் | 21 |
| 13. | கவிஞர் மாலதி அனந்தபத்மநாபன் | 23 |
| 14. | கவிமாமணி. தகடூர். தமிழ்க்கதிர் | 24 |
| 15. | எழுச்சிக் கவிஞர் தமிழன்பன் ப. முத்துசாமி | 25 |
| 16. | எழுச்சிக் கவிஞர் தமிழன்பன் ப. முத்துசாமி | 26 |
| 17. | கவிச்சுடர். ஆர். ராஜேஸ்வரி ஸ்ரீதர் | 27 |
| 18. | இந்திரா ஜெயப் பிரகாஷ் | 28 |
| 19. | முனைவர். க. பன்னீர் செல்வம் | 29 |
| 20. | புலவர். ஆ. காளியப்பன் | 30 |
| 21. | ஐஸ்வர்யா சந்திரன் | 31 |
| 22. | கிருஷ்ண பிரசாத் | 32 |
| 23. | Dr. S. சதாசிவம் | 33 |
| 24. | Dr. S. சதாசிவம் | 34 |

| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
| --- | --- | --- |
| 25. | Dr. S. சதாசிவம் | 35 |
| 26. | கவிஞர் பூங்காற்று குமார் | 36 |
| 27. | கவிஞர் செந்தமிழ் பூபதி | 38 |
| 28. | கவிஞர் விக்டர் நிக்கோலாஸ் (2-ஆம் பரிசு பெற்ற கவிதை) | 39 |
| 29. | புலவர் அரங்க. நடராசன் | 41 |
| 30. | இரா. கல்யாண சுந்தரம் | 42 |
| 31. | தமிழ்க் குழவி ஆ. விஸ்வநாதன் | 43 |
| 32. | கவிஞர் அ. கனகசபாபதி | 45 |
| 33. | வீ. உதயக்குமாரன் | 47 |
| 34. | கவிஞர் பொன். சந்திரன் | 48 |
| 35. | கலா விசு | 49 |
| 36. | B. இராமசாமி | 50 |
| 37. | B. இராமசாமி | 52 |
| 38. | கவிஞர் ச. அரிகரபுத்ரன் | 53 |
| 39. | முனைவர் சு. அட்சயா | 54 |
| 40. | வே. சுதர்சனம் | 55 |
| 41. | இரா. கனகராணி | 57 |
| 42. | கவிஞர் அ. பிரேமா அம்சவேல் | 58 |
| 43. | கவிஞர் சீர்காழி வீ. சௌரிராஜன் | 59 |
| 44. | கணுவாய் கிருஷ்ணமூர்த்தி | 60 |
| 45. | P. விஜி (அரவிந்த் சூர்யா) | 61 |
| 46. | காஞ்சி கவிஞர் கா. கலியபெருமாள் | 63 |
| 47. | அகநம்பி (எ) பாலசுப்பிரமணியம் | 64 |
| 48. | அகநம்பி (எ) பாலசுப்பிரமணியம் | 65 |
| 49. | ஜெ. புதுயுகம் | 66 |

| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
|---|---|---|
| 50. | எஸ். கர்ணன் | 67 |
| 51. | முனைவர் கி. கிருட்டினசாமி (முதல் பரிசு பெற்ற கவிதை) | 72 |
| 52. | கவிஞர். க. சுகுமாறன் | 73 |
| 53. | இதயநிலவன் | 75 |
| 54. | தமிழ்த்தோழி ச. விஜயரோகிணி | 76 |
| 55. | கவிஞர் அப்சரஸ் அ. இராஜேந்திரன் | 77 |
| 56. | முனைவர் ப. பாரதி | 79 |
| 57. | கவிஞர் யா. ஜெயரத்னம் | 80 |
| 58. | பேரா. வாசுகி ஜெயரத்னம் | 81 |
| 59. | K. கோபால ரெத்தினம் | 82 |
| 60. | சோ.ம. செயராசன் | 83 |
| 61. | கரு. பழநியப்பன் | 84 |
| 62. | கரு. பழநியப்பன் | 84 |
| 63. | கரு. பழநியப்பன் | 85 |
| 64. | கரு. பழநியப்பன் | 86 |
| 65. | கவியாளர் தேவனூர் ஆ.ச. செல்வராசு | 87 |
| 66. | ஒண்டிப்புதூர், கவிஞர் மு. நடராசன் | 89 |
| 67. | கவிஞர் கே.ஏ. ஜெஹபர் உசேன் | 90 |

**உதவுவோம்!** **உயர்த்துவோம்!** **உயர்வோம்!**

இறைவன் கொடுக்க நினைப்பதை
மனிதன் தடுக்க முடியாது

இறைவன் தடுக்க நினைப்பதை
மனிதன் கொடுக்க முடியாது

LOVE ALL SERVE ALL

பதிவு எண்: 512

# ஸ்ரீ அக்ஷயம் சேவா டிரஸ்ட்

**6-A, கோவிந்தன் தெரு, அரிசிப்பபாளையம், சேலம் 636 009.**

*Our Humble Pranama At Thy Lotus Feet*

---

## 1 வாழ்த்துக் கவிதை

கலைப் இலக்கிய மேம்பாட்டு
உலக பேரவையின் "மொட்டும் மலரும்"
பெயர்கொண்டு வெளிவர இருக்கும்
இரண்டாவது பிரசவம் கவிமலரை
கருணையின் வடிவு கொண்ட கவிஞர்களால்
சேந்தனாய் முன்நின்று சிரமங்கள் பலவென்று
சாதனைகள் பல சொல்லும் கவிமலர் விரைவில் வெளிவர
"மலர் மொட்டுக்கு" வாழ்த்துக்கள்
பல நூறு ஆண்டு சீர் பெறட்டும் உன் தொண்டு
இரவு பகல் பாராமல் மலர் வெளிவர
உழைக்கும் நாகர்கோயில் மொட்டும்மலரும்
குழுவுக்கு வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன்!



**P. ராஜ்பார்த்திபன்**
நிறுவனர்
**ஸ்ரீ அக்ஷயம் சேவா டிரஸ்ட்**
செல் : 8903220088

# அவனி ஆளும் மனிதம்! 2

அன்பெனும் வயலில் அறுவடை யாகும்
ஆருயிர் நெற்கதிர் மனிதம்;
அன்பெனும் மலையில் அருவியா யாகி
அமுதநீர் ஆவது மனிதம்;
அன்பெனும் கடலில் ஆழ்விளை பொருளாம்
அரியநல் முத்துதான் மனிதம்;
அன்பெனும் காட்டில் ஆருயிர் காக்கும்
அரியநல் மூலிகை மனிதம்.

அன்பெனும் நிலத்தில் நிழல்கனி ஈந்து
அரும்பயன் தருமரம் மனிதம்;
அன்பெனும் மேகம் ஆருயிர்க் காக
அருளிடும் உயிர்மழை மனிதம்;
அன்பெனும் காற்றில் உயிர்நிலை வாயு
ஆகியி ருப்பதே மனிதம்;
அன்பெனும் வெளியில் அனைத்திறை பொருளில்
அமிழ்தமாய் ஆனது மனிதம்.

அன்பெனும் அன்னை வயிற்றினில் கருவாய்
ஆகிடும் தாய்மையே மனிதம்;
அன்பெனும் மழலை அகத்தினுள் இருந்தால்
அதுதரும் பேறுதான் மனிதம்;
அன்பெனும் நெஞ்சுள் அரும்பிடும் நேய
அழகுடை தாமரை மனிதம்;
அன்பெனும் பண்பை அனைவரும் கொண்டால்
அவனியை ஆண்டிடும் மனிதம்!

**கே.பி. பத்மநாபன்**
6, இந்திரா நகர்
சாந்தி கியாஸ் அருகில்,
சிங்காநல்லூர். கோவை - 641 005.
செல் : 9488153283



# 3 திருக்குறளை மறக்காதே! திசை மாறிப்போகாதே!!

குறள் கூறும் கொள்கைதான் குடும்பத்தின் குறளோசை
அறம் கூறும் குவலயத்தில் குடும்பத்தின் மக்களோசை
அங்கமெலாம் செழித்து ஆனந்தம் பாடுவதே ஒலிஓசை
தங்கமெனும் ஒளிவிளக்காய் இருந்து மின்னுவதே எங்கள் ஓசை

நற்றமிழின் புகழேதான் பொதிகை மலைத் தென்றல்
கற்றவருக்கு குறள் கண்ணாக இருப்பதே விருந்தாகும்
நெல்லிலே விதை எடுத்து நேசமாக விதைத்தால்
நெல் மணிகள் தருவதே மக்களுக்குச் சத்தாகும்

வற்றாத நீரூற்றே குறளாகும் - வாழ்வதற்கு
சொத்தாக உலகத்தை இணைத்து ஒளிதருவதே குறள்
மல்லிகையாக மலர்ந்து மணம் வீசுவது குறள்
எட்டுத்திக்கும் எங்கள் குறளோசை ஒலிக்கட்டும்

தெருவெல்லாம் குறளோசை முழங்கட்டும்
எக்கணமும் குறள்வழியைப் பின்பற்றி இருந்தால்
எல்லோரும் நன்றாக வாழலாம் என்பதை உணர்ந்துவிடு
திருக்குறளை மறக்காதே திசை மாறிப்போகாதே

முப்பால் எப்போதும் வாழ்வில் வேண்டும்
தப்பாமல் குறள் எனும் அமுதுதான் கவலைதீர்க்கும் அருமருந்து
காலத்தால் அழியாத, கருத்தாழம் கொண்டது குறள்
திருக்குறளை மறக்காமல், திருந்திவாழ வேண்டும்.

சீரமைந்த செந்தமிழை புகழ் வானில் ஏற்றி
செய்தொழில் ஏர் முனையைக் கண்ணெனப் போற்றுவதே திருக்குறள்.



கவிஞர் **க. வேலுச்சாமி**
151, அன்னை இல்லம்,
கழுகரை, மடத்துக்குளம் அஞ்சல்,
மடத்துக்குளம் வட்டம் - 642113, திருப்பூர் மாவட்டம்.
செல் : 7598016477

# உலகாள்வோம் உயிர்த்தமிழால் 4

அருந்தமிழைப் போல
சிறந்த மொழி இல்லை
பெருமித உண்மையை
தீர்க்கமாய் சிந்தையில்
இருத்தி தூய தமிழ் பேசி
அருந்தமிழை அரியாசனம் ஏற்றி
உலகாள்வோம் உயிர்த்தமிழால்

அன்பறிவாய் அவனியை
ஆளும் தனித்தன்மை
அருந்தமிழ் இனத்திற்கே உள
பழமையில் செழுமையும்
இனிமையில் சிறந்த நம்
பைந்தமிழை அரியாசனம் ஏற்றி
உலகாள்வோம் உயிர்த்தமிழால்

வல்லினம் மெல்லினம்
இடையினம் பிரிந்தும்
வெல்லும் இயற்றமிழ்ச்
சொல்லாய் இணைந்தும்
இயங்குதற்கு இடர்யில்லா
இயற்றமிழை அரியாசனம் ஏற்றி
உலகாள்வோம் உயிர்த்தமிழால்

புவியாளும் இனம்தமிழினம்
எனக்கூவி உரைப்பதில்
எந்தப்பயனும் இல்லை
இதயத் துடிப்பில் இருக்கிற
இனத்தமிழை அரியாசனம் ஏற்றி
உலகாள்வோம் உயிர்த்தமிழால்



பாவலர் **எட்வின் நெல்சன் புரட்டாடோ**
பர்மா தமிழர்,
பெங்களூரு-47.
செல் : 7760153152.

# 5 அணிலோடுந் தென்னை

மகனோ இலண்டனில் மகளோ சென்னையில்
தகவுள துணையோ தவித்திடு மாறு

என்னிற் பிரிந்து இறையடி சேர்ந்தார்
தன்னந் தனியே தாங்கொணாத்துயருடன்

என்றன் இல்லில் இருக்கப் பயந்து
தென்னந் தோப்பில் தேற்றங் கொண்டு

என்பெரும் பொழுதை இயன்ற வரைக்கும்
கன்னந் தன்னில் கண்ணீர் வழியக்

கழித்து வந்தேன்; களிப்புத் தந்தன
சுழித்துத் தென்னை மரங்களில் ஓடும்

அணில்கள் தாமே; அன்றொரு நாளில்
அணில்கள் இரண்டும் ஆடி யோடி

அழகாய்த் தென்னையில் ஏறி யிறங்கி
பழக்கம்[1] போட்டன; பரவசத் துடனே

பார்த்து மகிழ்ந்தேன்; பார்த்த அவைகள்
நேர்த்தி யான நேரிணை[2] யாமே

ஆடிக் களித்த அவைகள் இரண்டும்
ஊடிக் கீழே இருந்த புதரின்

உள்ளே சென்று ஒளிந்து மறைந்தன
மெள்ளச் செடிகள் மிடுமிடுத்[3] தாடின

உள்ளே யவைகள் உல்லா சமாக
உள்ளன வென்று உவமை கொண்டு

நான்மகிழ்ந் திருக்க நடுங்கி ஆணணில்
ஊன்உறை யக்கத் தியோடி வந்தது.

என்ன நடந்தது எனவறி யநானும்
சின்னஞ் சிறிய சிறுகிளை யெடுத்துப்

புதரினை விலக்கிப் புகுந்து பார்த்தேன்.
குதறி4 இணையைக் கொடிய சாரை[5]

விழுங்கிடக் கண்டு விழுந்தோ டிவந்து
புழுங்கித் துடித்தேன்; பொறிகலங் கிநின்றேன்.

‘அணிலே அணிலே அழகிய அணிலே
துணையைக் காக்கத் துணிவில் லாமல்

ஓடிவந் தாயே உன்னைப் போன்றே
தேடிவந் தென்றன் தேன்மொழி யாளைச்

சாடித் தூக்கிச் சென்ற காலனை
நாடிப் பிடித்து நையப் புடைத்துக்

காலால் மிதித்துக் காக்க முடியா
ஏலாக்6 கொடிய இழிஞன் நானே!’

(பழக்கம் 1 - இணக்கம், நேரிணை 2 - உடன்பாடுள்ள இணை, மிடுமிடுத்து 3 - வேகமாக, குதறி 4 - உதறி, சாரை 5 - சாரைப் பாம்பு, ஏலா6 - இயலாத)

**த. கருணைச்சாமி பி.இ.,**
47/25, காந்தியார் சாலை,
என்.ஆர்.டி. நகர்,
தேனி - 625 531.
செல் : 9486736639



# 6 காலத்தின் பாடம்

பிறப்பென்னும் வாழ்வைப் பெற்றுக் கொண்டேன்
பிறந்தப் பயனை பெரிது முணர்ந்தேன்
இளமைக் காலம் இன்பங் கண்டது
வளமை வாழ்வை வகுத்து தந்தது
பெற்றவர் பிணைப்பு பெருமைக் கலந்து
உற்றக் காலத்தில் உயர்வை தந்தது
கல்விக் கற்றேன்; கடிதுப் பெற்றேன்
நல்வினை யாற்ற நற்காலம் வந்தது
வாழ்வின் தொடக்கம் பணியினைப் பெற்றேன்
தொழுது வணங்கினேன் தொடர்ந்தது வாழ்வு
காலம் கனிந்தது கைப்பிடித்தேன் இல்லாளை
ஞால வாழ்வில் நடந்திடும் நாடகங்கள்
பிள்ளைகள் பெற்றேன். பெரிதும் வளர்த்தேன்
நல்ல நிலையில் பிள்ளைகள் வாழ்வு
ஓடி, ஓடி உறைந்து நின்று
ஆடி, ஆடி அழகிய காலங்கள்
மாறி, மாறி மலர்ந்தது மனத்தில்
உணர்ந்து வந்தோர் உரிமை நிலையில்
உண்டு மகிழ்ந்தனர் உயர்த்திப் போற்றினர்
காலமென்னும் நல்லாள் நடந்தாள்

கனிந்தப் பொருளும் கைவிட்டுப் போனது
முதுமை கண்டேன்; முழுமை அறிந்தேன்
பொதுமைப் பூண்டேன்; பொங்கியது உள்ளம்
வாழும் வாழ்வில் தனிமை யானேன்
வாழ்வும் சிறுகச் சிறுக, வானில்
கலையும் மேகம் போல, வாழ்ந்து
நிலையும் கலைந்து, கண்க ளிரண்டும்
மங்கி, மங்கி, மாயும் நிலையில்
சுற்றிப் பார்த்தேன்; சூழ்ந்தோர் எவரும்
பற்றற்று பறந்தோடும் பாச நிலையைக்
கற்று உணர்ந்தேன் காலப் பாடத்திலே!

பாவலர் **இரா.கு. அரங்கசாமி, க.இ.**
கார்நாடகத் தமிழ்மொழிச் சிறுபான்மையினர்
நலப்பேரவை,
மதுரை ஸ்ரீ நம் பெருமாள் தொடக்கப் பள்ளி வளாகம்,
ஆண்டர்சன் பேட்டை, கோலார் தங்கவயல்,
கர்நாடகம்.
செல் : 9341733829



# 7 மட்கி வரும் மாந்தநேயம்

அவசர உலகில் அவரவர் பணியில்
கவலைகள் மனத்தைக் கரைத்திடும் நிலையில்
தவறி விழுந்தவர் தலையில் மிதிக்கும்
அவலம் கண்டோம் ஆண்டவன் எதிரில்!

எதிரில் நிற்பவன் எதிரியே யாயினும்
அதிரா மனத்துடன் அவர்நமர் என்றே
சதியால் கொன்ற சகுனி மனத்தனை
மதிக்கச் சொன்னவர் மெய்ப்பொருள் நாயனார்.

நாயனார் வழியில் நடக்கா விடினும்
தாயினைத் தந்தையைத் தாங்கிட லாமே!
தேய்பிறை யாயவர் தேம்பிடும் வேளை,
காய்முகம் நீக்கிக் கனிந்திட லாமே!

கனிந்திட லாமே கல்மனம் கொஞ்சம்!
பனிக்குடம் உடைத்துப் பாரினில் வந்தோம்;
தனித்தனி வழியில் சென்றிடு முன்னே,
இனித்திடு மன்பை இறைத்திடு வோமே!

இறைத்த கேணியோ என்றும் ஊறும்;
முறைத்து நடந்தால் முள்ளே ஏறும்.
சிறைக்குள் உளதோ தயவும், பண்பும்?
மறைந்து மட்குதோ மாந்த நேயமும்?

மாந்த நேயம் வாடிடும் முன்னே
சாந்த குணத்தைச் சத்திய நெறியைக்
காந்த அன்பைக் கழனிக் கிறைப்போம்
வேந்தனாய் வெறுப்பை ஒறுத்தல் அவசரம்!



நல்லாசிரியர் பாவலர் **வ. விஜயலட்சுமி**
72, 3-வது தெரு,
டாக்டர் புரட்சித் தலைவி நகர்,
தருமாபுரி, புதுச்சேரி - 605 009.
செல் : 9894629622

# புதையல்

8

இந்திய திருநாட்டின் திலகமான தமிழே
அன்னையே உன்னை மறந்தால் வாழ்வேது
இவ்வுலகு தோன்றிய முதலாய் நிறைந்தாயே
உன் உதிரத்துள் கலந்தவளே இன்னுயிரை

பன்னாட்டு மொழிகளுமே உன்னை அணி செய்யும் வேளை
வரும்போது உன் உயரம் கணிக்க முடியாது
நாகரீகத்துக்கெல்லாம் இலக்கணம் தந்தவளே
உன்னால் உலகமெல்லாம் தனிச்சிறப்பு பெற்றதுவே

வான்புகழ் வள்ளுவமும் வற்றா இலக்கியமும்
அள்ள அள்ளக் குறையாத புதையலாய் திகழ்ந்திடவே
இலக்கணங்கள் எல்லாமும் உன்னுள் அடக்கமாக
நாகரீகம் என்னவென்று கற்பித்தாய் தாயே

நாடும் மக்களும் நாளும் உன்னைப் புகழ்ந்திடவே
பன்னாட்டுத் தொடர்பினையும் எமக்களித்த நற்றமிழே
உலகத் தோற்றமெல்லாம் உன்னில் அடங்கியதே
பல்பொருளும் இலக்கணமும் எமக்களித்த தாயே

உன்னை வணங்கி விட்டு பணியினைத் தொடர
எல்லாப் புகழும் குவிந்திடுமே இமயமென
பல்மொழி வித்தகரும் உன்னடி தொழுதிடவே
விந்தையெல்லாம் புரிந்திடுவாய் என்னுயிரே

சங்கத்தமிழும் எட்டுத் தொகை நூல்களுமே
அணி அணியாய் உன்னழகைப் பெருக்கிட காண்போம்
பாவலரும் நாவலரும் புத்திலக்கியங்கள்
சேர்ந்திடவே வளர்ந்திடும் உன்னழகு என் சொல்லி பாடிடுவேன்




மகிழ்வுடனே...

**K. கிருஷ்ணன்**

164A - சங்கரன்கோவில் ரோடு,
கழுகுமலை - 628552.
போன் : 04632-251108

# 9 அறைசியல் (அரசியல்)

அரசியல் ஓர் கலை என்பார் கற்றோர்
நல்லவர்கள் கூடிடும் மன்றம் சிறப்பு
அரசு  இயல் என்னும் அறிவியல் கூற்று
அது கூறுவது ஆட்சியாளர் இயல்புகளை

காமா சோமா அர(றை)சியல்வாதிகள்
நாட்டில் உலவ அரசியல் சாக்கடை தானே
பேரறிஞர் பெர்னார்ட்ஷா கூற்றை நோக்க
சாக்கடை அரசியல் ஆக ஆபாசம் மீதமாக்க

நிர்வாகம் தெரிந்தோர் நாட்டில் நிறைய
நாட்டின் நிலைய மேன்மையடையும்
புல்லறிவாளர்களால் தாழ்மைதான் மீதம்
என்ன ஆனால் நமக்கு என்ன என்று கூறும்

மக்கள் நிறைந்து இங்கு வாழ்ந்தால் சீர்குலைவு
நாட்டின் வளமும் பொருளும் கேட்பாரற்று
அன்னியர்கள் ஆட்டம் போட அவலம் மீதம்
என்னதான் முடிவு என்று தெரியாத மக்கள்

கண்கட்டு வித்தைக்காரனிடம் மயங்கிடவே
நல்லவர்கள் சொல்லும் வீணே
என்று வாயில்லா பூச்சிகள் போல
திக்கற்று வகையற்று தவித்து நின்றார்

வருகின்ற நாட்கள் எல்லாம் திருநாள்
என்று அரசியலில் போலிகளும் புகுந்திடவே
நாட்டு சொத்து வளங்கள் எல்லாம் பறிபோக
சட்டமும் சம்பிரதாயங்களும் மௌனி என

வேடிக்கை பார்க்கும் நாட்டில் வந்தால்
படித்தவர்களும் அறிவாளிகளும் பொங்கிட
பூகம்பமாய் மாற்றம் ஒன்று நாளை நேரும்
மாற்றத்தை எதிர்நோக்க வகையறியாது

படித்தவர்களையும் அறிவாளிகளையும்
நாளும் பொழுதும் அவர் பணியைக் குறையே
சொல்வார்



மகிழ்வுடனே...

**ப. புவன கிருபாதேவி**
164- சங்கரன்கோவில் ரோடு, கழுகுமலை - 628552.
போன்: 04632- 251108

# தொழிலாளர் திருநாள் - வாழ்த்து 10

உழைத்துழைத்து உடம்பெல்லாம் ஓடாய்ப் போக
உத்தமராம் தொழிலாளர் வாழ்வு வாழ்க!
பிழைப்புக்கு வழிதேடி நாளும் சென்று
பின்னாளில் அவர்கள்தாம் உயர்வார் நன்று!
பிழையில்லா பணிசெய்து ஓங்கச் செய்வார்
பீறிட்டு வெளியேறும் வியர்வை எண்ணார்!
அழைத்தழைத்து இரையுண்ணும் காக்கைக் கூட்டம்
அறிவுறுத்தும் கொள்கைதன்னில் இவரே உள்ளார்!

அழைக்கின்ற இடம்தேடி அங்கு சென்று
அடுக்கடுக்காய் இருக்கின்ற வேலை செய்வார்!
பழையநல்ல பொருட்களெல்லாம் பழுது பார்த்து
பக்குவமாய்ச் சரி செய்து தருவார்! நல்லார்!
விழைகின்ற கலைதன்னை வளர்க்கும் கூட்டம்!
விவசாயத் தொழில்செய்தும் உயர்த்தும் கூட்டம்!
இழைநூலால் ஆடைகள் தைத்துத் தந்து
இனிதாக அணிந்துகொள்ள செய்வார் வாழ்க!

தழைத்துவரும் பயிர்களைத்தான் காக்கும் அன்பர்
தரணியிலே உழைப்பாளி ஆவார் நன்று!
குழைந்துபேசி தந்திரங்கள் அறியா நல்லார்
கூடியிழைக்கும் தொழிலாளர் வல்லார் கூட்டம்!

மழைநீர்போல் வியர்வைகள் உடம்பு எங்கும்
மருவிவரும்! அதுகாணார்! உழைப்பார் என்றும்!
நுழையாக இடந்தனக்கு சென்று நன்றாய்
நுட்பமான தொழில்செய்யும் இவரே வல்லார்!

கழைக்கரும்பு பயிர்செய்து காய்ச்சி வெல்லக்
கட்டியாகத் தந்துதவும் தொழிலா ளர்கள்!
குழைத்தெடுத்து செங்கற்கள் சிற்பம் மேலும்
குன்றெனவே வீடுகள்தாம் கட்டும் அன்பர்!
இழைத்திழைத்து உருவந்தன்னை பலகைச் சேர்த்து
இனியதாகக் கதவுகள்தாம் பதிய வைப்பார்!
மழைநீர்போல் பயன் கொடுக்கும் தீரர் வாழ்க!
மாண்புள்ள தொழிலாளர் கூட்டம் வாழ்க!

**ம. மயில் இளந்திரையன்**
'தமிழ் மருதம்'
2சி1, மாரியம்மன் கோயில் வீதி,
மாச்சம்பாளையம், சுந்தராபுரம் (அ.நி),
கோவை - 641024.
அ.பேசி : 9443081276



**மூன்றாவது பரிசு பெற்ற கவிதை**

# மாதர் தினம் வாழ்க! 11

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமெனும்
ஆர்ப்பரித்தெழும் முழக்கமதைக் கேளீர்!

ஆரணங்கின் பெருமைகளை அறியாதோர்
அவரை அடக்கி வைத்தார்! அநியாயமாய்
அடுப்படியே திருப்பதியாய் ஆக்கிவைத்தார்!
அவரைக் கருவிலேயே அழித்தும் நின்றார்!

விபரீதங்கள் எத்தனை நாட்களுக்குத் தான்!
வீறுகொண்டு எழுந்து நின்ற பெண்ணினம்
விந்தை பல நிகழ்த்தியே வியப்புக்குள்ளாக்கியது!
விழுக்காடு ஐம்பதென நிலைக்கண்டு விதியும் செய்தது!

பெண்ணின் மகத்துவத்தை-மாண்பதனைப்
புரியாதோர் பிதற்றுதலில் பொருளேதுமில்லை!

ஆணோடு பெண்ணினமும் சமமாக ஒழுகிநின்றால்
அகிலமெலாம் சீருற்றே இயங்குமென இறையவனும்
அர்த்த நாரீஸ்வரராய் எழுந்துநின்று விளக்கினார்!

தங்கையாக - தாயாக - தாரமாக,
திகழ்ந்து நிற்கும் அவளுடைய அவதாரம்
அதிசயமானதுவே! அளப்பதற்கரியதுவே!

அன்னை தெரசாவாக - அன்னிபெசண்டாக
இந்திரா காந்தியாக - கல்பனா சாவ்லாவாக
சானியா மிர்சாவாக - மகோன்னதமாகவே
மிளிர்ந்து நிற்கும் மங்கையர் குலம் வாழ்க!

ஆண் பெண் என்பதில் தாழ்வில்லை - சமமேயென
அறிவிக்கும் மாதர்தினம் வாழ்க.



**மதுரை க. பாண்டியன்**
1c, ராக்கப்பகோனார் சந்து,
கொத்தாலத் தெரு, மதுரை - 625 012.
செல் : 9245571522

# 12 நீரைத் தேடும் வேர்களாய்....

எதையும் செய்துமுடிக்கும்
எழுச்சி மிகு மாணவனே!

எண்ணிப்பார்,
கற்கும் உன்பருவத்தில்
கலைந்திடும் காட்சிகள்
எத்தனை எத்தனை?

சொகுசாய்த் தோன்றும்
ஒவ்வொன்றும் உன்னை மயக்கும்,
கஷ்டப்படுத்தும் காரியம்தானே - உன்னைக்
கலங்கரை விளக்கமாய் ஆக்கும்!

தன்பலம் அறியா யானை
தன்னலச் சிலரிடம்...
உன்பலம் அறியா நீயோ
உதவாக் கரையாய் உனக்குள்!

உன்னை நோக்கு, உன் குடும்பம் நோக்கு,
நீரில் தோன்றும் நீரலையாக...
உன்னில் சிந்தனை வலை வலையாக...
தினம் தினம் எண்ணு,

வெட்ட வெட்ட மரங்கள் துளிர்க்கும்
ஒவ்வொரு இயற்கையையும்
உற்றுக்கவனி!
உனக்குள் உண்மைகள்
ஒளிவிடத் தொடங்கும்.

உலகில் அறிவைத் தேடும் நீ
நிலத்தில் நீரைத் தேடும் வேர்களாய்...

பூக்கள் நிறையப் பூக்கும் போதுதான்
பொல்லாக் காற்றும் புகுந்தே அழிக்கும்!
அதிலும் தங்கிய ஆற்றல்மிக்கவை
அற்புதக்கனிகளாய்...
உன்னிலும் தோன்றும் பற்பல வெற்றிகள்...

உந்தன் வாழ்க்கை, உந்தன் கைகளில்
உண்மையை நம்பு உயர்வுதான் உனக்கு!


கவியாக்கம்
**இரா. மாரியப்பன்**
37, பி.எஸ்.கே.நகர்,
இராஜபாளையம்,
விருதுநகர்-626117.




# 13 மது, மாது தந்து கொண்டிருக்கும் அவலங்கள்

அவசரமாய் ஒருத்தன் காத்திருக்கிறான் - இங்கோ
ங்கா.... ங்கா.... என்ற ஓலம்
புத்தி கெட்ட தாயாரோ புட்டியிலே, புருசன் அவன்
மீதம் வைத்த சாராயத்தை தேடி ஓடி ஊற்றுகிறாள்

அம்மாமடி சொர்க்கமென்பது அறியாமல்
வயிற்றுப்பசி தீர்த்துக்கொள்ள இது தீர்த்தமல்ல சாராயம்
என்றறியுமோ குழந்தை?
பாரம் சுமக்கும் கணவன் பானகமதை பருகிவிட்டு மீதமுள்ளதை
வீணாக்காமல், வீண்பயல் அவனுக்கு பால்புட்டியில் பருகக் கொடுத்துவிட்டாள்

பசி தீர்ந்தது அன்னையின் முலைப்பாலா? தந்தை தந்த சாராயமா?
தூங்கிவிட்டான் என்று காத்திருப்பவனை நோக்கி பருவம்
முற்றுமுன் மோகத்திலே மூழ்கிவிட்டாள்.
குழந்தையவன் மயங்கிவிடுவதை அறியாள்,

முலைப்பாலுக்கு படத்தில் மாலையாகிவிட்டாள், அப்பா அன்று ஆடாமல்
இருந்திருந்தால், தாய் வீழாது இருந்திருப்பாள், இவன்
அப்பாக்களின் கணக்கு இவனுக்கு தெரியாது. இன்று இவனும்

மாதுதனை தாயாக்க தயாராகிவிட்டான்; பெண்மையே விழித்திரு;
மாலை சூட தயாராகிற இவனே, இப்பொழுதேகூட
சுவற்றில் மாலையாகிவிடும் காலம் சிறிதுதான்
குடும்பமெனும் வீட்டிற்கு தாய் தான் முகம் - ஆயின் இந்த கள்ள முகம்
அருகதையற்று அதனால் அவன் அக்கினியானான்
குலவிளக்கும் அக்னிதான் - சிவப்பு விளக்கும் .... அதே!



திருமதி. **மாலதி அனந்தபத்மநாபன்**
பார்வதி பவன், 14, நரசிம்மன் தெரு,
தர்மபுரி - 636701.
செல் : **9486833911**

# கவிஞன் ஒரு நீதிபதி! 14

1. கவிஞன் ஒருநீதி பதியாம்! - அவன்
கால்கள் பூமியின் வழிதடமாம்!
புவியின் செயல்தனை அவன்விரல்கள் - தினம்
புரிந்திடும் கவிதை வரியெனவே!
அவியா கண்கள் அறம்காக்கும் - அவன்
ஆசை உலகை எழிலாக்கும்!
தவிப்பான் மொழிபயன் காதேற்க - அவன்
தருவான் தமிழென வாய்மணக்க!

2. மூக்காய் உயிர்வளி மொழியென்பான் - மனித
மூர்க்க தனத்தை எதிர்த்திடுவான்!
தேக்கும் அறமதை உயிர்என்பான் - தமிழ்
தேனாம் அறமுடன் காத்திடுவான்!
ஆக்கும் யாவுமே தலையென்பான் - ஆமாம்
அனைத்திலும் வேண்டும் உயர்வென்பான்!
தூக்கம் விடியலாய் களைத்திடுவான் - பலர்
தூங்கிக் கெடுவதைத் தவிர்த்திடுவான்!

3. ஆணும் பெண்ணும் நிகரென்பான் - அவர்
யார்க்கும் அடிமை இல்லையென்பான்!
பேணும் மொழியில் சீர்காப்பான் - அவன்
பேசும் நீதியாம் தொழில்காப்பான்!
காணும் அறிவால் உலகினையே என்றும்
கண்ணியம் வளர பாட்டிசைப்பான்!
தோணும் அனைத்தையும் செயலாக்க - அவன்
தோன்றிடுவான் என்றும் வெற்றிடுவான்!

கவிமாமணி. **தகடூர். தமிழ்க்கதிர்**
3/212-ஆ, மலர் இல்லம்,
கௌரன் தெரு, ஆசாத் நகர்,
கிருட்டினகிரி,
கிருட்டினகிரி மாவட்டம் - 635 002.
கைப்பேசி : 9787379091



# 15 மாலை நேரம்

தேமாந் தளரசையத் தென்றல் தவழ்ந்துவரும்
சீரார்ந்த மாலையின் நேரம்
பூமாந்தும் வண்டுகள் புதியபண் ணிசையிலே
பூங்கவிதை பாடும் நேரம்
நாமார்க்கும் குடியிலை என்று பாடும் பறவை
வானிற் பறக்கும் நேரம்
பாமாந்தியே தமிழ்ப் பண்ணிலே தவழ்ந்திடும்
பாவலன் என்றன் கவிதை

நீலவான் விரிவிலே நெடியநல் லெண்ணங்கள்
நீந்தியே மனதில் தவழும்
கோலமா முகில்களும் குளிர்நிலாக் கதிர்களும்
கூடியே மனதில் நிறையும்
மாலைவீசுந் தென்றல் மலர்மணம் மேவியே
மகிழ்வுடன் மனதில் நிறையும்
சீலமாம் நல்லருள் நினைவுகள் கூடியே
செழுந்தமிழ்க் கவிதை முகிழ்க்கும்

நீண்டுயர் நெடுமலை நீலவண்ணத்திலே
நெஞ்சிலே இன்பம் நிறைக்கும்
காண்டகும் இன்பநற் காட்சிகள் சோலையில்
கனிந்துவந் துள்ளம் நிறைக்கும்
ஈண்டிவண் மனதிலேஇனிக்குமிவ் வெண்ணத்தில்
எழுந்ததே இன்பக் கவிதை

எழுச்சிக் கவிஞர்
**தமிழன்பன் ப. முத்துசாமி**
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
சிவியாம் பாளையம் முத்துகாபட்டி வழி,
நாமக்கல்.
செல் : 9486154514



# கவிதை

16

கவிவளமும் பொருள்வளமும் நடைவளமும் வேண்டும்
கருத்துகளை விளக்குவதில் சுருக்கமுறை வேண்டும்
செவிகுளிரும் சந்தவளம் சொல்வளமும் வேண்டும்
சிந்தையிலே மகிழ்வினிலோர் சிலிர்ப்புவிளைவிக்கும்
புவிமுழுதும் நலமுடன்வாழ் புத்தெழுச்சி வேண்டும்
புரட்சி விளை விக்கின்ற கிளர்ச்சிமொழி வேண்டும்
கவிதையிலே இவையனைத்தும் ஒருங்கிணைந்து நின்றால்
காலமெல்லாம் அக்கவிதை உலகுபுகழ் கவியாம்

இயற்கையெழில் பொங்குகின்ற இனிமையெலாம் வேண்டும்
எழில்குலுங்கும் பொழில்வளங்கள் அருவிவளம் வேண்டும்
இயற்கையினைப் பேணுகின்ற இனியமனம் வேண்டும்
செயற்கையாம் பலபொருளும் செய்துதரல் வேண்டும்
சிறப்பு மிகப் பயன்படுத்த வழிவகைகள் வேண்டும்
இயற்கைநலம் காத்துநல்ல இயல்பான அழகை
இனிமையுடன் இயம்புகின்ற கவிவளமும் வேண்டும்

உழைப்பாளர் உரிமைதனை எடுத்தியம்ப வேண்டும்
உரிமைக்காய்க் கிளர்ந்தெழுவோர்க் கெழுச்சிதரல் வேண்டும்
உழைத்திடுவோர் உழைக்காமல் உண்டு திளைக்கின்றோர்
உலகினிலே இரண்டுவர்க்கம் இல்லாமற் செய்ய
உழைத்திடுவோர் நல்லவிதம் உரிமைகளைப் பெறவும்
ஓங்குகுடி யாய்வாழும் பாங்குகளைச் சொல்லும்
உழைப்பாளர் அரசுதனை உருவாக்கி யெங்கும்
ஒப்புரவை உருவாக்கும் கவிதைகளே வேண்டும்


எழுச்சிக் கவிஞர்
**தமிழன்பன் ப. முத்துசாமி**
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
சிவியாம் பாளையம் முத்துகாபட்டி வழி,
நாமக்கல்.
செல் : 9486154514




## 17 "உன்னால் முடியும்... உணர்வாய் பெண்ணே!"

பணத்தை விட பாசம்தான் பெரியதென்று
பஞ்சப்பாட்டு பாடிட வேண்டாம்
பகுத்தறிவோடு நடப்பதென்று
பரதேசி வேஷம் போட்டிட வேண்டாம்!

உன்னைவிட உறவுதான் உயர்ந்ததென்று
உண்மையைக் கூறும் நாள் வந்திட வேண்டும்
உச்சியில் ஏற்றிய தீபம் போல - நாளும்
ஊருக்கு வெளிச்சம் காட்டிட வேண்டும்!

பசியை அடக்கிட பங்கிட்டு வேலை செய்ய
பாதி சுமையும் குறைந்திட வேண்டும்
பாதம் தொட்டு வணங்கிய பின் - நாளும்
பாசம்தான் பெரிதென்று உணர்ந்திட வேண்டும்!

கூட்டுக் குடும்பம் இனிமை பயக்க
கூடி வாழத் தெரிந்திட வேண்டும்
கூழைக் குடித்தாலும் கூட்டமாக இருந்திட
குதூகலம் பொங்கக் குடித்திட வேண்டும்!

தத்தளித்து வாழும் குடும்பத்தைப் பார்த்து
தரமான பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்
தரணி முழுவதும் சுற்றி வந்திட
தாய் தந்தை சொல்லைக் கேட்டிட வேண்டும்!

உன்னால் முடியும் உணர்வாய் பெண்ணே
ஒவ்வொரு வீட்டிலும் குத்துவிளக்கு நீயன்றோ
உண்மை நிலையை அறிந்திட்டதாலே
உலக சாதனையில் இடம் பெறுவாய் பெண்ணே!




கவிச்சுடர். **ஆர். ராஜேஸ்வரி ஸ்ரீதர்**
5B, காவேரி தெரு,
குருசாமி நகர் விரிவாக்கம்,
செம்பாக்கம், சென்னை - 73.
செல் : 9710715610, 9445729097

# அன்னைத் தமிழ்

18

அன்னைத் தமிழே உன்னைத் தேடி
அலையும் காலம் வந்திடுமோ!
செல்லப் பிள்ளைகளிடம் செந்தமிழ் பேசும்
பெற்றோர் இனமும் அழிந்திடுமோ!
எங்கும் தமிழ் எதிலும் தமிழ் - என்றே காலம் போய்
எங்கே தமிழ் எதற்கு தமிழ் - என்ற நிலை வந்திடுமோ!
ஐம்பது வார்த்தைக்கு ஒரு வார்த்தை
ஆங்கிலம் பேசும் காலம் போய்
பத்து வார்த்தைக்கு ஒரு தமிழ் சொல்
என்ற பாடாய்ப்படுத்தும் நாகரீகமும் மறையாதோ
அன்னைத் தமிழே உன்னையும்
ஆதரவற்றோர் இல்லத்தில் தன்னைப்பெற்ற
தாய்தந்தையை சேர்த்த நம் மைந்தர்கள்
சேர்த்துத்தான் விடுவாரோ
தவறு செய்யும் பிள்ளைகளை
தட்டிக்கேட்க மாட்டாயா
பொறுமை காத்தது போதுமம்மா
புத்தி புகட்டவாராயோ
உள்ளம் குமுறி அழுகின்றேன்
ஒன்றும் புரியாமல் தவிக்கின்றேன்
யாரோ முதுகில் அன்பாய் தட்ட
திரும்பிப்பார்த்த நான் திக்குமுக்காடிப் போனேன்
அன்பே உருவாய் என் அன்னை
தமிழென்னும் அமுதாய்
மகளே உலகில் தமிழ் காவலர்கள் உள்ள வரை
என்னை அழிக்க இயலாது
முதுமை என்பது எனக்கேது
என்று கண்களைத் துடைத்தாள் என்தாய் தமிழ்த்தாய்



**இந்திரா ஜெயப் பிரகாஷ்**
புது எண் : 25, பழைய எண் : 9,
கிருஷ்ணமாச்சாரி தெரு,
சுபாஷ் நகர், அனுராக் பிளாட் B4,
சென்னை 600044.

# 19 கலை இலக்கியம்

கலை கலைக்காக; இன்றோ மக்களுக்காக!
கலைகள் அறுபத்தி நான்கு என்போம்!
கலைகள் மக்களை மகிழ்விக்க! - வாழ்விக்க!
கலை படைப்பே இலக்கியம்; வாழ்விலக்கியம்!
கலையான வாழ்விலக்கியமே வாழும் பல்லாண்டு!
கலை நுணுக்கம் கண்டவன் தமிழன்.
கலை இசையாய் என்றும் மகிழ்விப்பாய்!
கலை அழிவில்லா ஒன்று அதனால் சங்கம்
கலைகளில் சங்க இலக்கியம், "பத்தும் எட்டும்".
கலையோ சங்கம் மருவிய காலத்திலும் உண்மை
கலையைக் கண்டோம் அறநூலாய், "பதினெண் கீழ்க்கணக்காய்"!
கலையின் மேம்பாடே, "அய்ந்திலக்கணம்" கண்டோம்!
கலையில் சிறந்தோன், "தொல்காப்பியன்" காண்கிறோம்.
கலையில் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்.
கலையின் உச்சமாய் புரட்சியாய் குடிமக்கள் காப்பியம்.
கலையால், "பக்தி இயக்கங்கள்; இலக்கியக் கொடைகள்"!
கலையே மனித மேன்மையின் உச்சம் உயர்வு!
கலைதான் வாழ்வியல் ஓட்டத்தின் சாரம்.
கலையின் கதாபாத்திரங்களே அவ்வக்கால மக்கள்.
கலையின் ஓட்ட வேகமே கவிதைத் தொகுப்புகள்!
கலைதான் மொழியின் வளர்ச்சி பாதுகாப்பு.
கலையை காப்போம்! மொழியை - மக்களை வளர்த்தெடுப்போம்!!

முனைவர். **க. பன்னீர் செல்வம்**
"தாமரை இல்லம்"
203/45, 13-வது குறுக்குத்தெரு,
த.வீ.வ.வா. பகுதி - 1,
ஆற்காடு - 632503, வே.மா.
கைப்பேசி : 9443968692



# வள்ளுவம் தந்த வாழ்வு 20

## (மரபுக் கவிதை : கலி விருத்தம்)

உலகெலாம் உய்யவே உயர்வழி காட்டும்
நிலமிசை புகழ்பெற நீதியை நாட்டும்
கலக்கம் நல்கும் ஊழ்தனை வெல்ல
பலமதைத் தருவதும் வள்ளுவர் குறளே.

அறமொடு பொருளும் அளவிலா இன்பமும்
மறவழி நீங்கி மன்பதை நிலைக்க
திறன்மிகு வாழ்வும் செழிப்பும் சேரவே
உறவினைக் கூட்டும் வள்ளுவர் குறளே.

இன்சொல் ஈகை விருந்தொடு நன்றியும்
கன்னல் மொழியார் காதலர் ஊடலும்
மின்னலாய் மறையும் மானிடர் வாழ்வும்
நன்றாய் உரைப்பதும் வள்ளுவர் குறளே.

இல்லாள் இயல்பும் இல்லறச் சிறப்பும்
நல்லறம் புரியும் துறவியர் ஒழுக்கமும்
அல்லல் போக்கும் ஆன்றோர் துணையும்
எல்லாம் சொல்வதும் வள்ளுவர் குறளே.

அமைச்சர் தூதுவர் அரணது வலிமையும்
நமையாள் மன்னன் நாட்டின் சிறப்பும்
இமையாக் கண்ணுடை படையின் செறுக்கும்
அமைத்துச் சொல்வதும் வள்ளுவர் குறளே.

மதுவும் சூதும் மயக்கும் கள்ளும்
பொதுமனப் பெண்டிர் பொல்லாக் கயமையும்
இதுவெலாம் நீங்கி உழவால் உயர
புதுவழி புகட்டும் குறளே வாழி.




புலவர். **ஆ. காளியப்பன் எம்.ஏ., எம்.எட்.,**
முத்தம்மாள் நிலையம்,
பூலுவபட்டி (அஞ்), கோவை (மா) 641101,
அலைபேசி : 9788552993

21

# கன்னித் தமிழ்

கன்னியிவள் அமுத மொழி கற்க
கரையில்லா வேட்கை கொண்ட
அறிஞர்கள் எத்தனையோ???

அடைமொழியோ? அண்டை மொழியோ?
வேண்டா(ம்) இவள் புகழ் சொல்ல,

பெண்ணே!!
கதை பல சொல்லும், உம் காத(அ)ணிகளோ!!!
இமைக்கும் விழியது இன்பம் கூட்டும் மாத்திரையோ!!!
பதங்கள் உம் பகுத்தறிவுச் சிந்தனையோ!!!
வழாநிலை உம் பெண்மைக்கு இலக்கணமோ!!!
இனிமை, எளிமை, சார்பு உம் குணங்களோ!!!
சிலேடை உம் திறமைக்கு உதாரணங்களோ!!!
குறில் இடையாயினும், நெடில் உம் சிறப்பல்லவோ!!!
சீர்கொண்ட உம் பார்வையாலே அசையிது உலகமே!!!
வேற்றுமையின்றி அன்பைப் புணரும் கன்னித்தாயும் நீயோ!!!
விஞ்ஞானமும் வியக்குது உம் தோற்றத்தாலே!!!

எண்ணத்தை எதிரொலிக்கும் எழிலிவளின்
ஏட்டுக் கவிபாட எத்தனை யுகங்கள்
தவம் இயற்றினேனோ!!!

**பொருள்**

மாத்திரை - எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு
அணி - அழகு, ஆபரணம்
பதங்கள் - சொல், பகுபதம், பகாபதம்
வழாநிலை - பிழையின்மை, இலக்கண முறைப்படி இருத்தல்.
சார்பு - சார்பெழுத்துக்கள், சார்ந்திருத்தல்
சிலேடை - ஒரு சொல் இரு பொருள் பட அமைவது
சீர் - அசைகள் பல சேர்ந்து அமைவது சீர்
அசை - ஓரெழுத்து தனித்தோ, இணைந்தோ ஒலியுடன் அசைந்து நிற்பது இயக்கம்
குறில் - குறுகிய ஓசையுடைய எழுத்துக்கள்,
இடை - இடையின எழுத்துக்கள், இடுப்பு
நெடில் - நெடிய ஓசையுடன் எழுத்துக்கள்
வேற்றுமை - வேற்றுமை உருபுகள், வேறுபடுத்துவது
புணரும் - இரு சொற்கள் இணைவது, பகிர்தல்
தோற்றம் - ஆதி, வடிவம்



இயற்றியவர்
**ஐஸ்வர்யா சந்திரன்**
2 - 8 - 73/4, இராமசாமி தேவர் காம்பவுண்ட்,
பெருமாள்கோயில் தெரு, மாலையாம்பட்டி அஞ்சல் - 629112, விருதுநகர்.

# சத்திய சோதனை

22

நித்திய பொழுதும்
புத்துயிர் எடுத்துப்
பிறந்தது
ஆத்மாவும்
ஆதி நன்றி கூறி
எழுந்தது

சத்திய சோதனை
மீண்டும் துவங்கியது
எத்தனைதான்
சாத்வீகம் பயின்றாலும்
சாத்தான் ஒன்று
புத்தியைப் பேதலித்தது

கண் ஒன்று
காணக்கூடாததைக்
கண்டு ரசித்தது
எண்ணமொன்று
எண்ணக்கூடாததை
எண்ணி ரசித்தது
வாயொன்று
விளம்பக்கூடாததை
வீசி தெளித்தது
சுவாசமோ
சிந்தை கலக்குவானை
சுவாசிக்க நேசித்தது
மனமோ
மந்திபோல்
இவையுடன் செல்ல
முந்திக்கொண்டது
கைகளும்
கண்டதைக் கைப்பற்ற
கால்களோ துரிதமாக
விசைத்தது

இப்படித்தானே
இத்தனை நாளும்
இழுக்கப்பட்டு இழிவுற்றேன்
இன்னுமிது ஓயவில்லையே

இன்னுமொரு நாள்...
நித்தியப் பொழுதும்
புத்துயிரெடுத்துப் பிறந்தது
புத்திக்கென்றோ
புத்தொளி பிறந்து
சாத்வீகம் பழகுவது?

அறிகிலேன்....!

**கிருஷ்ண பிரசாத்**
பிளாக் “AL” எண் - 156,
இரண்டாவது தெரு, அண்ணாநகர்,
சென்னை 600040.
செல் : 9841015960



# 23 பாடம்

திருட்டுக் காக்கை தந்திர நரி
கதையில் தான் ஆரம்பிப்போம்

சிறார்களை
சத்தம் போடாதே என அதட்டி
'ஆறுவது சினம்' சொல்லித்தருவோம்.

'மழையே மழையே போ
மற்றுமொரு நாள் வா',
ஆங்கிலப் பாட்டை
வானம் பார்த்த பூமியின்
வகுப்பறையில் பாட வைப்போம்.

சொந்த ஊரின்
பூலோகம் தெரியாத பிள்ளைகளிடம்
கண்டங்கள், மாகடல்கள் பெயர் சொல்லி
பொது அறிவு வளர்ப்போம்.

கொல்லாமை போற்றும் நாட்டில்
பல்லாயிரம் பேரைக் கொன்று
நாடு பிடித்த அலெக்சாண்டரை
மாவீரன் என வரலாறு கற்பிப்போம்.

இப்படித்தான் நாங்கள்
பள்ளிக் கல்வியில்
பலமான அடித்தளம்
நாட்டுவோம்.

**Dr. S. சதாசிவம்**
Former Directer, CPMB,
TNAU, Coimbatore,
21-B, Caption Palanisamy Lay out,
A- A Scheme Road, R.S.Puram,
Coimbatore - 641002.



# ஓலம்

24

வாழ்க்கைச்சாலையின்
ஓரத்தில் ஓலமிட்டு
அழுது கொண்டிருந்த
காலத்திடம்
வழிப்போக்கன் ஒருவன்
ஆச்சரியத்துடன் வினவினான்
“அகிலத்தையே ஆட்டிப்படைக்கும்
காலத்துக்கே கவலையா”

“ஐந்தாறு பில்லியன் ஆண்டுகளில்
ஆதவன் அழிந்துவிடுமாம்
நானும் உடன்கட்டை ஏறிவிடுவேனே
அய்யகோ வாழ்கை இவ்வளவுதானா”
ஒப்பாரி வைத்தது காலம்

புன்னகைத்து நகர்ந்தான் அந்த
இரக்க மனதுக்காரன்.

**Dr. S. சதாசிவம்**
Former Directer, CPMB,
TNAU, Coimbatore,
21-B, Caption Palanisamy Lay out,
A- A Scheme Road, R.S.Puram,
Coimbatore - 641002.



**25**

# கடிதம்

அன்பே, என் ஆருயிரே,
உன் அடிமை நான்
புரியாதவளா நீ!

கோடையிலே குளிர்காற்று நீ,
வாடையிலே வெந்நீர் நீ,
அடுக்களையில் பணியாள் நீ,
அழுக்கு நீக்கித்துவைக்க நீ,
இசை வழங்கும் வாணி நீ,
இல்லத்தில் நாடகம் காட்டிவும் நீ.

தொட்டவரை எரித்துக்கரியாக்கும்,
பத்தினிப் பெண் தான் நீ,
இருந்தாலும் இப்படி,
அடிக்கடி ஓடி மறைந்தால் எப்படி?

காற்றுவேகம் குறைந்தால்,
காணாமல் போகின்றாய்,
மழை பொய்த்தும் போயின்,
மாயமாய் மறைகிறாய்,
தூத்துக்குடியிலும், நெய்வேலியிலும்,
அனல் வீச்சுக் குறைந்தாலும் - மேட்டூரில்,
புனல் வேகம் குறைந்தாலும்,
உன் தரிசனம் கிடைப்பதில்லை.

உன்னை, மொட்டைமாடியில்,
சூரிய ஒளிவாங்கிப் பெட்டிக்குள்,
சிறையிட்டுக் காக்கப் போகிறேன்,
இந்த அந்தப்புரம் விடுத்து, இனி
எப்படி நீ காணாமல் போகமுடியும்?

**Dr. S. சதாசிவம்**
Former Directer, CPMB,
TNAU, Coimbatore,
21-B, Caption Palanisamy Lay out,
A- A Scheme Road, R.S.Puram,
Coimbatore - 641002.



# இரவிலே பெற்றோம் இன்னும் விடியவே இல்லை

26

அகர முதல எழுத்தொலியை
அவனிதனில் உன் சிறப்பொலியை
உலகத்து மொழிகளுக்குள்
என் மொழிகளுக்குள்
உயர்ந்திட்ட ஓர் மொழியே
என் செம்மொழியே
என் தமிழ்மொழியே
உன்னைத் தலை வணங்கி
என் கவியை எழுதுகிறேன்!
வாழ்த்துவாயாக!
கயிலையிலே
நாரதர் சிவனிடத்தே கேட்டாராம்
ஏணிப்படி மனிதர்களை
மடையராக்கி விட்டீர்கள் என்று!
சிவபெருமான் சொன்னாராம்
இந்தியாவை மட்டும்
சுற்றி பார்த்து விட்டு
இப்படியெல்லாம் பேசாதீர்!
இந்தியன்
சமுதாய மோர்வையிலும்
சாதி வெறியிலும்
சுகமாய் தூங்குகிறான்
மானம் என்பதையும்
நாணம் என்பதையும்
சில இக்கால மகளிர்
தானம் கொடுத்து

தொலைத்து விட்டார்கள்!
கவி எழுத ஆளில்லை
வரும் கவிகள் கூட
பசியோடு திரியும்
நிலையிங்கே!
நடிகர் நடிகையின் முன்னுரையின்றி
இங்கே விலைபோவதில்லை!
முற்றும் துறந்த முனிவன்கூட
இக்காலம் வந்தால்
இல்லறம் நடத்த
துணையைத் தேடி செல்வான்
இந்நிலை மாறட்டும்
இளைஞர்கள், மாணவர்கள்
விழித்திடட்டும்
கலாம் சொன்னபடி
நடப்போம்!
இரவிலே பெற்றோம்
இன்னும் விடியவில்லை
இனியாவது விடியட்டும்
இந்தியா வல்லரசு, நல்லரசு ஆகட்டும்!

வந்தே மாதரம்!

ஜெய்ஹந்த்

கவிஞர் **பூங்காற்று குமார்**
No.14, கார்த்திகேயன் நகர்
அருணகிரி தெரு,
மதுரவாயல், சென்னை - 95.
அ. பேசி : 9176548655



# 27

# உண்மையின் வடிவம்!
# அ முதல் ஃ வரை

அன்பின் வடிவம்
ஆற்றல் தருபவன்
இன்பம் மகிழ்த்தவள்
ஈகை வளர்ப்பவன்
உள்ளத்தில் நிறைந்தவள்
ஊழ்வினை ஒழிப்பவள்
என்றும் நிலைத்தவள்
ஏற்றம் நிலைத்தவள்
ஐயம் தீர்ப்பவள்
ஒற்றுமை பேணுபவள்
ஓங்காரத்தின் நாதமானவள்
ஔவியம் தடவுபவள்
ஃகாய் நிலைத்தவள் அன்னை!
இவள் கற்பனையும் அல்ல
கவிதையும் அல்ல
புனிதப்பொருளாய்
உண்மையின் வடிவாய் தாய்!

கவிஞர் **செந்தமிழ் பூபதி**
8/122, இலட்சுமி நாயக்கன்பாளையம்,
செலக்கரிச்சல் கிராமம்,
சூலூர் (TK),
கோவை - 641658.



## 28 நற்பிறவியை நாடு

தோன்றுதல் இயற்கை தொடந்திடும் வரவுகள்,
வேண்டுதல் செய்தும் விரும்பியே பெறுவார்,
உத்தமா மனிதர்கள் உலகினில் தோன்றியே
மொத்தமாய் நல்லுரை நவின்றே சென்றார்.

உலகினை இயக்கும் உன்னத சக்தியை
உலகோர் இறையென உவந்துக் கூறுவார்தாம்
பற்றிடும் மதமதே பாரினில் உயர்வென
மற்றவை தீதென மகிழ்வாய்க் கூறுவார்.

நல்லதைச் செய்வதில் நாட்டமது இல்லை
பொய்தனைப் குணங்களே பொருந்தின நிறைவாய்
பொய்தனைக் கூறிட மறந்தேப் போவார்.

சொல்லிடும் சொல்லெலாம் சுடரெனப் பொய்கள்
தெள்ளெனப் பாய்ந்திடும் வற்றாத நதிபோல்
ஒடுமுறைக் கூறிடும் ஒப்பந்தப் பொய்கள்
மறுமுறைச் சொல்ல மறந்தே போவார்.

ஆண்டவன் படைப்பினில் அற்புதம் பெண்கள்
அன்னையாய் தாரமாய் அக்காள் தங்கையாய்
அகிலத்தில் தோன்றிய அன்பினைப் பொழிவார்
கணவனைத் தொழுது கணிகையாய் அகமளித்து

கற்பூர தீபமாய் கற்புடன் வாழ்வார் - அவர்
பெய்திடு மழையெனில் பூமியே குளிர்ந்திடும்!
பொய்யாய் மாறியசில பெண்களின் வாழ்க்கை
செய்திடும் செயல்களைச் சொல்லிடக் கூடுமோ?

கட்டியக் கணவனை கள்ள உறவுடன்,
வெட்டியே வீழ்த்தி விழிநீர் பெருகிட,
மட்டிலா சோகமதை முகமதில் காட்டியே,
பட்டியாய் லாழ்ந்திடும் பாசாங்குப் பெண்கள்!

அரசியலின் புகுவோர் அடைவார் உயர்வை
வெள்ளை ஆடையணிந்த வெற்று மனத்தவர்
நல்லவராய் நடித்தால் நாட்டையும் ஆளலாம்!
வல்லவர் அவரிடம் வளர்ந்திடும் கோடிகள்

மதங்களில் மூழ்கிடும் மனமதுக் கொண்டோர்
மறைந்தால் அடைவது மோட்சம் நரகமென்பார்!
சென்றவர் வந்திங்குச் சொன்னது உண்டா?
விண்கலம் சென்றும் வைகுண்டம் காணோம்

நல்ல மனத்தவர் வாழ்வது மோட்சம்!
பொல்லாக் குணத்தவர் வாழ்க்கையே நரகம்!
இறைவன் நாளென இயம்பிடும் போலிகள்
மறைந்திடா வாழ்வினை வாழ்வதும் இல்லையே!

உடலில் ஆவியது ஒட்டிய இடமெது?
அறிந்துக் கூறிடும் ஆற்றல் எவர்க்குண்டு?
பிரிந்திட்ட ஆவிக்கு புகலிடம் இல்லை
உலகைச் சுற்றியே உலவிடும் உண்மை!

ஆவிக்கு அளிந்திடும் அன்னமும் படையலும்
ஊசிமுனை அளவும் உண்மையில் போய்சேரா
தெரிந்தும் செய்திடும் திருந்தா மனிதர்கள்,
வறியவர்க் களித்தால் வாழ்த்திப் போற்றுவார்.

நிலையிலா வாழ்வினை நினைத்து மாந்தர்
கதைதனை மனதில் களைந்து வாழ்வினில்
மறந்தும் தீமையை மனதினில் தீண்டாது
சிறந்து வாழ்வதால் சேர்ந்திடும் நன்மையே!

கவிஞர் **விக்டர் நிக்கோலாஸ், எம்.ஏ.,**
12, இரண்டாவது குறுக்குத் தெ, விக்டோரியா நகர்,
புதுச்சேரி - 605 005.
செல்: **80154 29152, 78450 05141**



**இரண்டாம் பரிசு பெற்ற கவிதை**

## 29

# ஆடு பாம்பே!

வளைந்து வளைந்துவளைந் தாடுபாம்பே! - இந்த
வையகத்து ளோர்வணங்கும் நல்லபாம்பே!
விளைந்த கொடியநஞ்சைக் கொண்டபாம்பே - நீ
விரைந்து படத்தைவிரித் தாடுபம்பே!

கோடானு கோடிவந்து கொட்டுமெனி னும் - ஒரு
கோடாத நாவுகொண்டு வாழவேண்டும்!
ஏடா குடங்கள்செய்ய எத்தனித்தாலே - பொருள்
இருந்ததும் ஏகிடுமென றாடுபாம்பே!

பத்துமாத முஞ்சுமந்து பெற்றுவளர்த் து - உன்னைப்
பாதுகாத்த தாய்வயிறு பற்றிஎரி ய
பற்றையழித் தேமுதியோர் இல்லத்தில்விட் டால் - உன்னை
பார்முழுவதும் தூற்றிடுமென் றாடுபாம்பே!

தேர்வினிலே தோல்வியுற்ற காரணத்தி னால் - தூக்கைத்
தோந்தெடுத்துத் தொங்குவதால் யாருக்குநட் டம்?
கார்விலக ஆதவனும் ஒளிர்வதைப் போல் - தோல்வி
கடந்த பின்பு வெற்றியென்றே ஆடுபாம்பே!

ஏரிகுளம் நீர்நிலையைத் தூர்த்துவிட லாம் - மழை
ஏற்றமுறப் பெய்தினும் நிலத்தடி நீர்
மாரியால் உயர்ந்துவர வாய்ப்பிலதா கும் - தண்ணீர்
வற்றின்உயிர்வர மாண்டிடுமென் றாடுபாம்பே!

சின்னஞ்சிறு பெண்பிள்ளையைக் கடத்திச்சென் று - அவளைச்
சின்னாபின்ன மாக்கியபின் கொன்று வீசும்
மண்ணரக்கர் யாவரையும் மக்களின் முன்னே - சுட்டு
மாய்ப்பதுதான் நல்லதென் றாடுபாம்பே!


அன்பன்
கலைமாமணி புலவர் **அரங்க. நடராசன்**
17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம்,
புதுச்சேரி - 605013.




# செம்மொழித் தமிழே நம் மொழி!

செம்மொழித் தமிழே நம்மொழி யென்று
செப்பிடும் போதே இனிக்கிறது - இதன்
சீரிளமைக்கு ஈடில்லை என்பதை
திருக்குறள் ஒன்றே உரைக்கிறது.

அள்ளக் குறையா ஊற்றெனச் சுரக்கும்
அழகியல் சிறப்பு விழுமியது - நமது
ஔவை, பாரதி, கம்பன், இளங்கோ
அளித்த கொடையால் பெருகியது.

ஓலையில் எழுதிய காவியம் அன்று
உயர்ந்த பரண்களில் தூங்கியது - மக்கள்
ஓடும் நீரிலும் தீயிலும் போட்டதால்
ஒப்பற்ற படைப்புகள் அருகியது!

ஆயினும் எஞ்சிய அரிய இலக்கிய
அணிகலன் பலதும் கிட்டியது - இதில்
அற்புதமான தொல்காப் பியமும்
ஐம் பெரும் காப்பிய (மு)ம் மிஞ்சியது.

ஆறு ஆயிரம் மொழிகள் உலகினில்
கூறுகள் பலவாய் இருந்தாலும் - மொத்தம்
ஆறே மொழிகள்தான் செவ்விய மொழியாம்
அதனில் ஒன்றே தமிழாகும்!

சீனம், ஹிப்ரூ, கிரேக்கம், லத்தீன்,
தமிழுடன் *சாங்ரீட் ஆறாகும் - இவையுள்
சிறந்த இலக்கியம் சீர்மிகு வாழ்வியல்
சேர்ந்த செம்மொழி தமிழாகும்!
*சாங்ரீட் (ஆங்கிலம்) - சமஸ்கிருதம்.

**இரா. கல்யாண சுந்தரம்**
No. 7, நடுத்தெரு,
அனுப்பானடி,
மதுரை - 625 009.
கைபேசி : 93452 22470



# 31 நான் ஒரு விதையாவேன்

1. அன்னை வயிற்றில் ஐயிரு திங்கள்
அமிழ்தாய்த் விளைந்திவ் வவனியில் வந்தச்
சின்ன திருவுடல் சித்திர வதனம்
செழித்து வளர்ந்த சிறுகதை கேண்மின்!

2. கண்ணின் மணியே கரும்பே என்று
கன்னம் கிள்ளியும் கண்விழி திருத்தியும்
தன்னின் உயிராய்த் தளிர்முலை அருத்தித்
தளிர்நடை பயிற்றித் தான்மகிழ்ந் தனள்தாய்!

3. வெயிலும் மழையும் பாரா துழைத்து
வெம்பியும் காய்ந்தும் விரல்நுனி பிடித்துச்
செயிர்தீர் கல்வி சிறப்புடன் கற்கச்
சிதைந்தும் மலர்ந்தும் சிறந்தனர் தந்தை!

4. எத்தனை எத்தனை ஆசிரி யர்கள்
எழுதப் படிக்க ஊடக இழையாய்
வித்தைகள் தந்தனர், வியனுல கத்து
வேடிக்கை யாவும் நிரல்பட வைத்தனர்!

5. ஒன்றா இரண்டா உள்ளம் விரும்பி
உருகி உருகிப் படித்த நூல்கள்;
நன்றே அவையோ நாநலம் தந்து
நமனையே வெல்ல நறுங்கவி தந்தன!

6. பணிக்குச் சென்றனன் தொலைபே சித்துறை
பம்பரம் போலச் சுழன்றனன்; வாழ்வில்

பிணக்குகள் இல்லை, பிறழ்ச்சியும் இல்லை,
பீடுகள் மிகுந்தன; பெருமைகள் சேர்ந்தன!

7. ஆன்மத் தாமரை மலர மலர
ஆகம் வளரா திருக்குமா என்ன?
கேண்மைகொண் டொழுகிய கேளிர் பலபேர்
கேட்டிலும் நின்ற கிளைஞர் சிலபேர்!

8. திருமண பந்தமும், பயனுமாய் மக்கள்
திறம்பட பெற்று வளர்ந்திட, மானுட
அருமையும் தவறா தமைந்தது; பொதுப்பணி
ஆற்றவும் போற்றவும் அகமும் மகிழ்ந்தது!

**தமிழ்க் குழவி ஆ. விஸ்வநாதன்**
நிறுவனர், குறளகம்.
51, கீழ இராமன்புதூர்,
நாகர்கோவில்-2.
அலைபேசி : 9442580620



# 32 "அன்னை!"

தொடுவானம் என்றேதான் சொல்லு வார்கள்!
தொட்டவரோ உலகினிலே எவரும் இல்லை!
கடவுள்தான் உண்டென்று சொல்லு வார்கள்!
கண்டவரோ நாட்டினிலே எவரும் இல்லை!
கடவுளாக அன்னையைத்தான் ஏற்ப வர்க்கு
காட்சிக்கும் கருத்திற்கும் மெய்யாய் நிற்பாள்!
கடுப்புதனைக் காட்டமத அன்னை அன்பில்
கருணையான அன்பொன்றே நிலைத்து நிற்கும்!

அன்னையைப்போல் சிறந்ததொரு கோயிலும் இல்லை!
அன்னையவள் போலே ஓர் தெய்வம் இல்லை!
அன்னையினை வணங்காதோர் மனிதரே இல்லை!
அன்னைக்கே ஈடாக யாரும் இல்லை!
அன்னையவள் பத்துமாதம் சிசுவைத் தான்தன்
அடிவயிற்றில் சுமக்கின்றாள் சிரமத் தோடே!
அன்னைக்கு நாம்செய்யும் தொண்டைப் பார்த்து,
அகிலமெல்லாம் போற்றவேண்டும் நம்மைக் கண்டு!

வயிற்றினிலே கருவொன்றை சுமக்கும் அன்னை
வலியெடுத்து வோர்நாளில் துமது டித்தே
உயிராக சிசுவொன்றை ஈன்றெ டுத்தும்
உன்னதமாய் "மறுபிறவி" எடுக்கின் றாளே!
உயிர்க்காக்க தன்னுடலை வருத்திக் கொண்டும்,
உணவினிலே பத்தியத்தைக் கடைபி டித்தும்
வயிறையுமே வாயையுமே கட்டிக் காத்து
வளமாக குழந்தையினை வளர்க் கின்றாள்!

அன்னையவள் குழந்தையினை உறங்க வைக்க
அனுதினமும் நித்திரையைத் தொலைக் தின்றாள்!
எண்ணில்லா வேதனையை நாளும் நாளும்
ஏற்றிட்டே தன்சிசுவைக் காக்கின் றாளே!
அன்னையைத்தான் குறையின்றிக் காப்ப வர்க்கே
அத்தனையும் “புண்ணியமாய்” வந்து சேரும்!
அன்னையினைக் “காப்பகத்தில்” விடுவோர்க் கென்றும்
அத்தனையும் “பாவங்களாய்” வாழ்வில் சேரும்!




கவிஞர் **அ. கனகசபாபதி, எம்.ஏ.,பி.எட்.,**
132.வினாயகா நகர்,
துருகம் ரோடு. கள்ளக்குறிச்சி - 606 202,
விழுப்புரம் மாவட்டம்.
கைபேசி : 9245556195

# 33 அன்றைய பொற்காலம்

நுங்கு வண்டி ஓட்டிக் கொண்டு
புழுதிச்சாலைகளில் ஓடிய நாட்களும்
சுற்றி சுற்றி வந்து
‘கொலை கொலையா முந்திரிக்கா’
பாட்டுப்பாடி ஆடிய நாட்களும்
இரு விழிகளுக்குள்
இன்னும் நிழலாடுகிறது.

ஆறு மைல் தூரம்
செருப்புகளின்றி நடந்து சென்று
முத்துப்பேட்டை கீற்று கொட்டகையில்
‘பராசக்தியும் பாசமலரும்’ பார்த்து
தேம்பி அழுத நாட்களும்
நெஞ்சத் திரையில்
காட்சிகளாய் விரிகிறது.

புளியமரத்து நிழலில் ஆடிய
பல்லாங்குழி விளையாட்டு
பாட்டி சொன்ன கதைகளைக்
கேட்டு ரசித்த நினைவுகள்
அத்தனையும் இழந்தோம்

கணினியும் தொலைக்காட்சியும்
வந்த பிறகு
சுருங்கிவிட்டது காலம்
இனி எக்காலமும் வராது
அன்றைய பொற்காலம்.

**வீ. உதயக்குமாரன்**
வீரன்வயல் 614738,
ஜாம்புவானாடை அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம்.
செல் : 9962861594
udhayakumaran2015@gmail.com



# ஜல்லிக்கட்டு



வாடிவாசல் திறந்ததும் வாகைசூட சீறும்
திமில் தழுவும் காளையரை கண்சிமிட்டும் நேரத்தில்
கொம்பு புறம்காட்டி கொம்பன்களை ஏமாற்றி
சீவிய கொம்புகளோடு சீறிவரும் காளைகள்.

கொம்புசீவி பணம்முடித்து சல்லிக்கட்டு பெயர்வைத்தார்
கொம்புபிடிக்கும் கொம்பன்கள் மீசைமுறுக்கும் காளையர்கள்
திமில் தழுவி, வால் பிடித்து, துரத்தி ஓடி,
சல்லிக்கட்டை எடுப்பதற்கு மல்லுக்கட்டி நிற்பர்.
திமில்பிடித்து கொம்புபிடிக்கத் திணறுவர்.

எதிரே நின்று கொம்பு பிடிக்க
வீரம் நெஞ்சில் உறுதியோடு
குருதியெங்கும் பாயும்
திமில் பிடித்து தழுவும்போது
திமிறித் திமிறிக் குதிக்கும்
குத்தித் தூக்கித் தூர வீசும்.

கொம்பு கிழித்த கோடுகளில் குருதி வழிந்தோடும்,
அந்தரத்தில் பறக்கும்போது அகிலமெல்லாம் இருளும்.
ஆனாலும்.... வீரம் விளையும்,சல்லிக்கட்டை எடுப்பான்
ஈரம் கசியும்.

கொம்புகிழித்த கோடுகளைத் தடவித்தடவிக் கொடுப்பாள்,
மூடிவைத்த முகம் கொண்டு முத்தமிட்டு தழுவுவாள்.
சல்லிக்கட்டு காயங்கள் -
வீரத்தில் விளைந்த வடுக்களாய் மாறும்
வாழ்வில் வசந்தங்களை எந்நாளும் பாடும்.



கவிஞர் **பொன். சந்திரன்**
3/228-பி- சர்க்கார் கொல்லப்பட்டி,
சேலம் - 636030.
செல் : 9442222394

# 35 மழையே! மழையே?

வானம் பார்த்து நிற்கும்
பூமிக்குத்தான் தெரியும் மழையின் அருமை...
நீரோட்டம் இல்லையென்றால்
பூமியின் சுழற்சி தப்புத்தாளமாகி விடும்.
பசுமையின் ஆதாரமும்
மழையே ஆகும்
வெப்பத்தின் தகிப்பிற்கும்
காவலனாய் மாறும்

நீரில்லாத உலகத்தை
நினைத்துப் பார்க்கவே இயலாது...
வானமும் பூமியும்
கைகுலுக்கும் தருணமது!
மழையின் வருகை
மயிலுக்குத் தெரியும்
மண்ணின் மைந்தன்
விவசாயிக்கும் அது புரியும்

சில்லென்ற மழைத்துளி பூமியிலே விழ
வாசனையை தூது அனுப்பி
வரவேற்ற காலம் போய்
ஐயோ! என்றலறுமளவிற்கு
கொட்டித்தீர்த்த மழை!
ரமணன் வரமாட்டாரா!
வானிலை அறிக்கை தரமாட்டாரா?
என ஏங்கிய வாண்டுகள் கூட
“அய்யய்யோ ரமணன்!”
என கதறும் அளவிற்கு
கொட்டித்தீர்த்த மழை!

இயற்கையைக் கண்டுகொள்ளாத மக்களின்
இதயத்தைப் புரிந்து கொண்ட இயற்கை
மக்களைப் புறந்தள்ளி வேட்டையாடுகிறது!
புரிந்து கொள்வார்களா?
என்பதே இப்போதைய கேள்வி.



**கலா விசு**
43C - முதல் குறுக்குத் தெரு,
வெங்கட்டா நகர், புதுச்சேரி - 11.
அலைபேசி : 9842577822

# 36 ஓர் சிவப்பு விளக்கின் மனம் திறப்பு

நாங்கள் வழிகாட்டும் வண்ண விளக்கல்ல
எச்சரிக்கும் சிவப்பு விளக்கு!
எங்களிடம் கற்பைத் தேடுவது கடலில் கரைந்த
பெருங்காயத்தைத் தேடுதல் போலாகும்!
குடும்பப் பெண்ணுக்கு வாழ்வில் ஓர் முதலிரவு
எங்களுக்குத் தினந்தோறும் பல முதலிரவு!
எல்லோரும் இன்பத்தை நோக்கி வருகிறார்கள்
நாங்கள் துன்பத்தை நோக்கிப் போகிறோம்!
எங்கள் தொழிலுக்கு மூலதனம் மூடாத முந்தானையே!
நாங்கள் பகலில் தூங்கி இரவில் விழிக்கும் இன்பராணிகள்!
நாங்கள் இரவில் மட்டும் ஒளிவிடும் பாஸ்வரங்கள்!
நாங்கள் இன்பத்தை வாரி வழங்கும் வள்ளல்கள்!
நாங்கள் எல்லோருக்கும் எப்போதும் திறந்த புத்தகம்!
நாங்கள் மனிதனின் மகள் அல்ல - மன்மதனின் பொம்மைகள்
- நாட்டில்
எங்களால் தான் ஜனத்தொகை பெருகாமலிருக்கிறது!
எங்கள் தங்கையே சினிமாவில் நட்சத்திரமாக மின்னுகிறாள்.
எங்களை சிறைபிடிக்கும் போலீஸூம் தொட்டுத் தடவி பார்க்கிறது
உருகும் மெழுகு வெளிச்சத்தைத் தருகிறது - இங்கு
கருகும் நாங்கள் இன்பத்தைக் கொடுக்கிறோம்!
காமசாஸ்த்திரம் ஓதும் எங்கள் மண்டபத்திற்கு
தினந்தோறும் பல பக்தர்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள்

வயலில் மேயும் மிருகத்திற்கு கொழுப்பு ஏறும்
எங்களை மேயும் மனித மிருகத்திற்கு கொழுப்பு அடங்கும்!
எங்களை எச்சைச்சோறு என்கிறார்கள் பலர்
இதையே இனிக்கிறது என்கிறார்கள் சிலர்
இதுவே இன்பலோகம்யென்றே சொல்கிறார்கள் சிலர்
அறுபது வயதில் ஓய்வு கிடைக்கிறது அரசாங்கத்தில்
அழகு குறைந்தால் ஓய்வு கிடைக்கிறது அந்தரங்கத்தில்
கல்பட்டு கண்ணாடி உடைந்ததுபோல் - பலர்
கைபட்டு என் மேனி குலைந்ததம்மா! - சுடும்
சொல்பட்டு என் நெஞ்சம் கலங்குதம்மா - இறுதிவரை
இல்வாழ்க்கை என்பதே எங்களுக்கில்லை தெரிந்ததம்மா!

**B. இராமசாமி**
(கதை கவிதை நாடகாசிரியர்)
2/2, 3-வது தெரு, ஸ்ரீராம் நகர்,
சென்னை - 600 113.
அ.பேசி : 9444914996



# இளம் கைம்பெண்ணின் கண்ணீர் 37

சின்னசிறு வயதில் சிறகொடிந்த எங்களுக்கு
சிகிச்சையளிக்க முன் வருவோரைக்கூட
சீறி துரத்துகிறது இச்சீர்கெட்டச் சமூதாயம்!
வெண்மையாய் காட்சியளிக்கும் எங்கள்உடலை
வெறுங்கட்டையென நினைக்கும் வெறிநாய்கள்
வெறும்பேற்றி எங்களை வேதனைப்பட செய்கிறர்கள்
பூத்துக்குலுங்கும் புதுமலர் கூட எங்களைப் பார்த்து
பூரிப்பதுமில்லை புன்னகைப்பதுமில்லை புனுகுசவ்வாதும்
புதுநறுமணம் வீசுவதுமில்லை;
மங்கையர்கெனப் பிறந்த மஞ்சள்குங்குமம்கூட
எங்களைப் பார்த்து நையாண்டிச் செய்கிறது! - அதை
எங்களுக்கு தொட்டுப் பார்க்கும் பாக்கியமுமில்லையாம்
கற்பிழந்தவள் கூடகண்ணியமாய் நடக்கும் போது
களங்கமில்லா நாங்கள் மட்டும் கவலைப்படுவதேன்?
வேசியைகூட வரவேற்கும் சுபகாரியங்களுக்கு
வேதனைப்படும் எங்களை மட்டும் ஏனோ ஏற்பதில்லை?
வெண்ணிற ஆடையில் வெந்துவெளிப்படுதேக் கண்ணீர்!
பூனைகுறுக்கே வந்தாலும் பொறுத்துக் கொள்பவர்கள்
நாங்கள் தெரிந்தோ தெரியாமலோ வந்துவிட்டால்
முகத்தை சுளித்து மூன்னூறு வார்த்தைகளேன்? - நாங்கள்
முகம் பார்க்கும் கண்ணாடியை முடிந்தவரையில் பார்ப்பதில்லை
முகத்தை மூடினால் மட்டும் எங்களுக்கு முதுமைவந்திடுமா?
முந்தானையால் முகத்தைமூடி அழத்தானே முடிகிறது?
வெள்ளைக் காகிதம் பூவானஎங்கள் மீது பரிதாப்பட்டு
பன்னீர்தெளிக்க யாரேனும் முன்னுக்கு வந்தால்
பழகிய நினைவுகளை மறந்து புதிய புருஷனோடு பூரிக்க முடியும்!
இனியாவது இளம் விதவைகளை விடுவிக்க - தேவையான
இளைஞர்கள் மனம் திறந்து முன்னுக்கு வருவார்களா?
எங்களுக்கு மறுவாழ்வுத் தருவார்களா?



**B. இராமசாமி**
(கதை கவிதை நாடகாசிரியர்)
2/2, 3-வது தெரு, ஸ்ரீராம் நகர்,
சென்னை - 600 113.
செல் : 9444914996, வீடு : 044-22354996

38

# "மயக்கம்"

மயக்கங்கள் பலகோடி... அதை அநுபவித்து
வாழ்ந்தவர் சிலகோடி,
மகராணி சிவப்புரோஜா... ஆனாலும்
தேவதாசிகள் மீது மயக்கம் மன்னருக்கு!
கற்புக்கரசி கண்ணகி இருந்தும்... மாதவி மீது
காதல் மயக்கம் வந்தது கோவலனுக்கு!
தேவதைபோல் தெய்வானை இருந்தும்... முருகனுக்கு
வள்ளி மீது மயக்கம் வந்தது!
அழகிய மலர்மீது வண்டினங்களுக்கு மயக்கம்!
ஆழ்வார்களுக்கு பெருமாள் மீது மயக்கம்!
சிவனடியார்களுக்கு சிவன்மீது மயக்கம்!
பணம் படைத்தோர்க்கு "பார்"மீது மயக்கம்!
பாட்டாளி மக்களுக்கு "டாஸ்மாக்"மீது மயக்கம்!
கண்ணதாசன் காலத்தில் பன்னிரண்டு குழந்தைகள்!
காலப்போக்கில் இரண்டு- ஒன்றாகி... அதுவும்
பூக்காத புஷ்பவதி... கனியாத மரமாகி...
பயிலும் மாணவ மாணவிகள் மதுவில் மயக்கம்!
பள்ளியில் தண்ணியடித்து தள்ளாடிய மாணவர்!
சென்னை வேளச்சேரி அரசுப்பள்ளியில் குடிபோதையில்
ஒன்பதாம் வகுப்பு மாணவர் வாந்தி எடுத்தார்- "சஸ்பெண்ட்"
நாகம் தீண்டிய நங்கையை ஞானசம்பந்தர் உயிர்ப்பித்தார் -
மயிலையில்!
இன்று, மதுஅருந்தி உயிர்நீக்கும் குலக்கொழுந்தை
படைத்த பிரம்மாவாலும் பிறவியெடுக்க முடியாது!
ஆறோடும் நீரோடும் கால்வாய் இருந்தது அந்தக்காலம்!
இன்றோ... தெருவெங்கும் தீர்த்தமாய் ஓடுகிறது மதுநீர்!
"மக்களின் மயக்கத்தில் மக்களாட்சி!"
என்று தணியும் இந்த மது மயக்கம்!?
காலம் தான் பதில் கூற வேண்டும்!

கவிவடிவம்,
**ச. அரிகரபுத்ரன்**
ஓய்வு பெற்ற சென்னை ஓட்டுநர்,
206-11லேக் அவன்யூ,
முதல் தெரு, திருக்கழுங்குன்றம் சாலை,
வல்லம் - P.O., காஞ்சிபுரம் மாவட்டம் - 603003.



# முயற்சி



இளைஞனே! நீ முயன்றால்
இமயத்தைக் கூட தொட்டுவிடுவோம் (தொட்டு விடலாம்)
உன் மனதில் இருக்கும் சுமையை இறக்கி (விடு)
உன் எண்ணத்தை வானளாவ பறக்கவிடு
நினைத்தால் சாதனையாளன் ஆவாய் நீ - முயன்றால்
சரித்திரம் படைப்பாய் நீ
தடைக்கற்களைப் படிகற்களாக்கு
சோதனைகளைச் சாதனைகளாக்க
வேதனைகளை வெற்றிகளாக்கு
வரலாறுகளைப் படிப்பதைவிட
நீயே ஒரு வரலாறாக வாழ்ந்து காட்டு
வருங்கால சமுதாயத்தை மாற்றிக்காட்டு
தொடுவானம் தொலைவு இல்லை
தொட்டு விடும் தூரம் தான்
அதைத் தொட்டுவிடும் வரையில்
உன் வைராக்கியம் விட்டு விடாதே...
எழுந்து வா இளைஞனே!
விதிகளை மீறாமல் தடைகளை உடைத்திடு...!
விண்ணையும் தாண்டி நீ வெற்றிகள் குவித்திடு...!



முனைவர் **சு. அட்சயா**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி,
கோவை.

# 40 நானிலம் வாழ நல்லுணர்வு வளர்க

உயிர்க்கெலாம் முதல்வன் ஆதியஞ் சுடரென
மயர்வற மதிநலம் பெற்றார் அறிவரே
உண்மை அறியார் நல்லுணர்வு இன்றியே
உண்மையை மறந்தே வளர்ப்பர் வேற்றுமையே
உயிர்கள் தோறும் இறைவன் உறைந்தும்
பெயராத மாயைசேர் அறியாமை தன்னால்
உள்ளுறை இறைவனை உணர மாட்டாரே
உணர்ந்தால் பகையில்லை வெறுப்புமில்லை
சுயநல இருள்சேர் மாயையில் உலகோர்
அயர்வெய்தி அன்பு அறிவும் நீங்கியே
எத்தனை பாவவினைகள் செய்கின்றார்
அத்தனையும் உலகில் காணும் உண்மையே
சுயநலத்தால் பெறுகின்ற நன்மை ஏதுமில்லை
அயலவராய் உற்றார் உறவினரை எண்ணியே
தூரவே விலகி ஓடுவார் பித்தர்போல்
தானடைந்த செல்வம் நிலைத்து நில்லாதென
இன்றைய உலகம் நல்லது உணராதே
குன்றிமணி போல்அகம் குன்றுவது ஏனோ?
நன்றே வளர்க! நானிலம் உணராதே
மனத்தில் உறுதியை என்றுமே பெருக்கி
தினமும் சிந்தையில் தூய்மையை வளர்க்கவே
அறநெறிவளர்க! அன்புமணம் பரவுக!
மறநெறி தவிர்க்க! மனமாண்பு உறுக!
உணர்வார் யாரோ நிகரிலா நெறியினை
உணர்வார் அவரே பேரின்ப உலகே

## அன்பு

அன்பே வாழ்வின் உயிர்நாடி
அன்பால் யாவரும் சேர்ந்திடலாம்

அன்பு மழையால் உயிர்வளரும்
அன்பு வறண்டால் உயிர் வாடும்
அன்பால் துன்ப இருள்விலகும்
அன்பே இறைவன் உருவாகும்
அன்பால் உலகில் வாழ்வுண்டு
அன்பு இல்லையேல் தாழ்வாகும்
அன்பிலார் உயிரேதும் இல்லாரே
அன்பிலா மாந்தர் விலங்கனையர்
அன்னை வளர்ப்போம் உயிர்வளர்ப்போம்
அன்பே தெய்வம் என்போமே.

## அருள்

அருளினை உடையோர் உயர்ந்தோரே
அருளின் பார்வை தெய்வீகம்
அருளை உயிர்க்குத் துணையாகும்
அருளைப் பெற்றால் துன்பமில்லை
அருளினை இழந்தோர் இழிந்தோரே
அருளெனும் செல்வம் பெருஞ்செல்வம்
அருளினை அறியார் அறிவிலரே
அருள்சேர் உலகம் வாழ்ந்திடுமே
அருளால் பெறுவர் வீடென்றே
அருள்மிகு வள்ளுவர் அருளினாரே
அருள்வோர் முனிவர் என்போரே
அருளால் மகிழ்வோம் உயர்வோமே.

**வே. சுதர்சனம்**
40, KNK நகர் 3-ஆம் தெரு,
ரெங்கநாதபுரம்,
சூலூர் - 671402.
அலைபேசி : 9944489029



# வேரின் விருட்சம்!

தலை விருட்சமாய் நிமிர்ந்து நிற்கும்
தாகம் தீர்க்கும் மொழிக்கு
தாய்மையை வளர்க்க
தரகர் தேவையா என்ன?

தம்மை ஈன்ற தாயைவிட்டு
வேறொருவரை தாய் என்போமா?
தமிழன் என்று சொல்வதற்கு
தயக்கம் எதற்கு?

மரத்திலிருந்து சருகுகள் விழலாம்
வேர் விழுந்து விடுமா?

தமிழ் உணர்வை வளர்க்க
நாம் ஒன்று தத்தெடுக்கவில்லை
சேய்க்காக தன்னை செதுக்குபவள் தாய்
செம்மொழிக்காக நம்மை செதுக்குவோம் இனிதாய்!

முதலும் நீயே!
மூலமும் நீயே!
அடைக்கலம் கொடுத்தோம் நாம் - அதனால்
ஆடையை பிடித்திழுக்க விடலாமா?

கேணியில் இருக்கும் நீரைவிட்டு
கானல் நீரைத் தேடிபோனால்
தாகம் தீர்த்துக் கொள்ள முடியுமா?

வேரின்றி மரமில்லை, பெண்ணின்றி தாய்மையில்லை
ஆணின்றி உழைப்பில்லை, பிள்ளையின்றி
பெருமையில்லை
தமிழ் உணர்வின்றி இப்பூவுலகு இல்லை.....

**இரா. கனகராணி** எம்.ஏ., பி.எட்,
144/பி, சீனிவாசா டவுண்சிப்,
வைஷ்ணவிபுரம், தவளக்குப்பம்,
புதுச்சேரி-7.
செல் : 9843747579



# வேப்பமரம்

42

வெட்டி கிடக்குதிங்கு
வேப்ப மரம் ஒன்று
அதன் அடி வேர் தனில்
ஏங்கி தவிக்குது இங்கு
அன்றில் ரெண்டு
அதன் கிளை தனில் அன்று
நல் கூடு கட்டி கூடி களித்ததும்
குஞ்சுகளுடன் கொஞ்சி மகிழ்ததும்
கனவேயென ஆனதடி பைங்கிளியே
என் காதல் பைங்கிளியே
அவர் தம் கனவு இல்லத்திற்கு
நம் காதல் இல்லம்
அஸ்திவாரம் எனவானதே
என் பைங்கிளியே
காலம் தான் வருமோ
நாம் காதல் கொள்வதற்கு
இனி ஒரு புகலிடம் தான்
கிடைத்திடுமோ பைங்கிளியே.
மழை வேணும் அதற்கு
மரம் நட வேண்டும்
வளர்ந்திட மரம் தனில் வாழும்
இந்த அன்பு உயிரினங்கள்
தங்க புகலிடம் தானே இது.


கவிஞர் **அ. பிரேமா அம்சவேல்**
97 வேலமுதலி தெரு,
குறிஞ்சிப்பாடி (P.O) - 607302,
கடலூர் மாவட்டம்.
செல் : 9345060415, 9976166802




# 43 நாட்டுக் குழைத்த நல்லோரைப் போற்றுவோம்!

நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நம்தமி ழுணர்த்தும் நலந்தரும் சொற்கள்
வீடும் ஒளிரும் விருந்தினர் ஓம்பலால்
விண்ணவரின் நல்விருந்து இதுவள்ளுவன் குறள்சொல்
காடுக ளழிந்திடின் காலமழை பொய்க்கும்
காலத்தின் மாற்றம் கருகிடும் வளங்கள்
தேடும் செல்வங்கள் திரவியம் குன்றிடின்
தினந்தினம் மாந்தர் திண்டாடும் நிலையே!

நற்றவ பயனால் நாடாண்ட வேந்தர்
நம்மக்கள் வாழ்ந்திட நாளுமே யுழைத்தார்
விற்பல விளைவால் வெற்றிவாகை சூடி
விரிகடல் வையத்தில் வியந்திட வாழ்த்துமே
நற்பல மிழந்து நலிந்த நம்மன்னர்
நட்பினால் நாடீந்து நகைத்திட வீழ்ந்தனர்
வர்த்தகம் செய்யவே வந்தேரி வெள்ளையன்
வளங்களை அழித்தானே வாழ்நாளில் கொள்ளையன்

நஞ்செனவே நம்மினத்தை நாளும் அழித்து
நசுக்கிய வம்பரை நாடோட்டி விரட்டிட
பஞ்சுமெத்தை சுகந்துறந்து பசியினை தாங்கி
படைகொண்டு எதிர்நின்று பறங்கியனை சாய்த்திட
வெஞ்சிறையில் வெந்துடல் விளையாற்றி நித்தமும்
வெகுண்டெழுந்த வேங்கையென விடியல் காணவே
கஞ்சிக்கும் வழியின்றி கடுந்தண்டனை யடைந்து
கண்டவிடுதலை மாவீரரை கழுத்தாலே போற்றுவோம்!



வள்ளல்நம்பி.
கவிஞர் **சீர்காழி வீ. சௌரிராஜன்**
4, அபிராமிநகர், திட்டை அஞ்சல்,
சீர்காழி (Tk.), நாகை (Dt.) 609111.
செல் : 9787974527

# தமிழின் கீதம்

44

தமிழர்கள் நாம் அனைவரும் ஒன்றாகக் கூடிடுவோம்
தமிழர்கள் நாம் தமிழின் சுவாசத்தை ஒன்றாகப் பகிர்ந்திடுவோம்
தமிழர்களின் குடும்பங்களை நாம் ஒன்றாக கூட்டி
சேர்த்திடுவோம்
தமிழர்களுக்கு நல்வழி சொல்லி நல்வாழ்வு வாழ வழிவகுத்திடுவோம்
தமிழர்கள் நாம் நம்மிடம் உள்ள பகைமையை ஒழித்திடுவோம்
தமிழர்கள் நாம் அனைவரையும் அறவழியில் நடக்க
வழிசெய்திடுவோம்
தமிழர்களின் குடும்ப வாழ்க்கை முறைகள் எல்லாம் அழகேதான்
தமிழர்களின் வாழ்வில் என்றுமே மகிழ்ச்சியோ மகிழ்ச்சிதான்
தமிழர்களின் வாழ்க்கையில் உள்ள வறுமையை நாம்
ஒழித்திடுவோம்
தமிழர்கள் நாம் ஒன்றாக அன்புடன் இணைந்திடுவோம்
தமிழர்களுக்கு நோய்கள் இல்லாத வாழ்வை நாம்
அமைத்திடுவோம்.
தமிழர்கள் நாம் அன்பான வாழ்க்கை வாழ்ந்திடுவோம்
தமிழர்கள் நாம் உலகில் அமைதியை ஏற்படுத்திடுவோம்
தமிழர்களின் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் நாம்
பாதுகாத்திடுவோம்
தமிழர்களின் பண்பாட்டைப் பேணி நாம் காத்திடுவோம்
தமிழர்களின் தாய்மொழி தமிழ் மொழியையும், தாய்
நாட்டையும் காத்திடுவோம்
தமிழர்கள் நாம் தமிழின் கீதம் அனுதினம் பாடிவோம்
தமிழர்கள் நாம் அகிலம் போற்ற நல்வாழ்வு வாழ்த்திடுவோம்
தமிழர்கள் நாம் ஒற்றுமையாக தமிழுக்குச் சேவை செய்திடுவோம்
தமிழின் பெருமையை உலகம் முழுவதும் நாம் பரவச்
செய்திடுவோம்.

**கணுவாய் கிருஷ்ணமூர்த்தி**
7/38-1, அண்ணா நகர்,
தடாகம் ரோடு,
கணுவாய், கோயம்புத்தூர் 614108.
செல் : 9171692970



# 45 இயற்கை வளங்கள் தூய்மையாக நிழற் குடையாக.....

தெரிந்து கொள்
மனிதா
ஜனனம், மரணம்
மனித வாழ்க்கையின் பயணங்கள்!
இறைவன் படைப்பில்
இனிமையானது இயற்கைச் செல்வங்கள்!
ஆகாயம், நிலம், நீர், காற்று, அக்னி
அத்தனையும் பொக்கிஸங்கள்!

ஆத்திகம், நாத்திகம் பேசும்
அனைவருமே
ஐந்து தத்து வங்களின் கலவைகள்!
கருப்பு இனத்தவருக்கும்
விதி ஒன்றே!
பேதம் ஏதும் இருப்பதில்லை
தேசம் கடந்து பார்த்தாலும்!

அறியாமை இருளில்
ஆழ்ந்துறங்கும் மனிதா,
இயற்கையைக் கூறு போட்டு
மாசு படுத்தும் செயல்
உனக்கு நீயே வழங்கும்
மரண தண்டனையல்லவா!

இருக்கும் வரையில்,
இயற்கையின் சொர்க்கத்தில்,
இணக்கமாக வாழ கற்றுக்கொள்!

அகிலம் முழுவதிலும்
அமைதி பூக்கள் மலர,
அழியட்டும் அணு ஆயுதங்கள்!

மாற்றம் நிகழாவிட்டால்
மன்னிக்க மாட்டாள் இயற்கை அன்னை!
அதன் சீற்றத்தில் - அனைத்துமே
மண்ணோடு மண்ணாக,
மனித இனமே பிணக்குவியலாக,
மாறப் போவது திண்ணமே!

விழித்துக் கொள்,
விரைந்து செயல்படு
இனிவரும் தலைமுறை
இளைப்பாற இருக்கட்டும்
இயற்கை வளங்கள்,
தூய்மையாக, நிழற்குடையாக!

**P. விஜி (அரவிந்த் சூர்யா)**
10, Kayathri Manor,
Flat No. : 5, Third Floor,
1st Cross, II Main AREKERE,
B.G. Road, Bangalore - 76.

# 46 தொழிலே தெய்வம்

சின்னப் பயலே
உனக்கொரு செய்தி
செப்புவேன் கேளாய்
சிந்தையில் கொள்வாய்!

தொழிலே தெய்வமெனத்
தொழுதுப் பணிபுரி
பழுதற உனக்குப்
பயனை விளைவிக்கும்!

தோல்வியே நேரினும்
துவளா திருந்து
வேள்வியாய் செயல்
விளையும் பயனே!

எத்தொழி லாயினும்
சித்தம் தெளிவுற
நேர்த்தியாய் உழைத்திடு
நிறைவுறப் பயன்தரும்!

செய்யும் தொழிலை
சிதைக்கும் மூடரை
வியர்வை ஈட்டியால்
விரட்டிட எண்ணு!

கண்ணும் கருத்துமாய்
எண்ணிடின் எத்தொழிலும்
விண்ணளவு உயர்த்தி
விருட்சமாய் பயன்தரும்!

உழைப்பால் உயர்ந்தவர்
உலகத்தில் கோடி
இழந்தோரை எண்ணாதே
வாழ்ந்தோரை நினை!

உழைப்பில்லா எத்தொழிலும்
இழப்பையே கொடுக்கும்
பிழையாய் எவர் வாழ்வும்
பேரிடர் இழைக்கும்!

புலைத் தொழிலாயினும்
நிலைத்திட எண்ணு
பிழையேதும் நேராது
பேரின்பம் விளைக்கும்!

கடன்பட்டு செய்தாலும்
உடன்பட்டு உழைத்தால்
இடரான அச்சுமை
தடந்தெரியாது ஒழியும்!

நால்வரேனும் உன்னால்
பயன்பெற எண்ணு
நால்வரால் நானிலம்
உயர்த்திடும் கண்ணு!

நாமும் வாழ்வோம்
நாட்டையும் உயர்த்துவோம்
ஈடில்லா உழைப்பே
இன்பம் பயத்திடும்!



காஞ்சி கவிஞர் **கா. கலியபெருமாள்**
தலைவர், திருக்கழுக்குன்றம் ஒன்றியம்,
புதுப்பட்டினம், முதல்நிலை ஊராட்சி மன்றம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 102.
அ.பேசி. : 9381045091

47

# இயற்கையே உன்னை யாசிக்கிறேன்

களிமண் சிலைபோலும் கல்லா மனிதர்
அழகுருவும் - என்றே கருத்திட்டார்
அருட்திரு வள்ளுவரும் அகிலத்து
ஆய்ந்தறிந்து மானுடம் தாம் சிறக்க

மட்டிலா மனத்தோடு மாண்புறச் செயல்பட்டே
மாநிலத்து மண்முழுக்க மழையென
பொழிந்திட்டார் மாசெல்வம் கல்விதனை
கர்மவீரர் காம ராசும்

பொய்கை அணைபோலே காத்திட்டார்
செம்மல ரவர் பொன்னீலனார்
சங்கரலிங்கனார் போற்றி போற்றி
தன்னலம் பாராது தந்தனரே உயர்கல்வி

ஆரம்ப கல்வி முதல் ஆய்வுக்காலம் வரை
கல்விச்சாலை மனம் நிறைய காசே தான்
நிறைந்திருக்கு - இன்றோ உயர்கல்வி நீ பெற்றால்
எனக்கேது பயன் என்றே

தனம் நோக்கும் வியாபாரி போல
இக்கால பேராசிரியர் இயம்புகையில்
என்னகத்துள் பெரும் பூதம் பேய்
என்றே தோன்றிடுது பேரா-சிறியர் உரு

தவித்திடுதே தற்போது கடைச்சரக்காய்
நற்கல்வி - என்செய்வேன் மானுடம் தழைக்க
மாவட்டந்தோறும் மறுபிறவி
காமராசு சங்கரலிங்கனாரும் மண்ணுலகு

தரவேண்டி மனதார்ந்து மன்றாடி
வேண்டுகிறேன் இல்லையில்லை
இயற்கையே உன்னை
அனுதினம் யாசிக்கிறேன்.




**அகநம்பி (எ) பாலசுப்பிரமணியம்**
தினத்தந்தி நிரூபர், கல்பாக்கம்.
கோசலை நினைவு கல்வி அறக்கட்டளை
இயற்கை சக்தி பப்ளிகேஷன்ஸ்,
புன்னமை கிராமம், சீவாடி கிராமம் & அஞ்சல்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்: 9585480754

# 48 உயிரினைத் தொடரச் செய்வோம்!

கண்விழித்த காலந்தொட்டு களிப்புறும்
காட்சி - நீலக்கடலோடு செங்கடல்
கருங்கடலும் நீங்கா அலையுறவு
துள்ளிடும் மீனினங்கள் அதிசயத்தோடு ஆச்சர்யம்!

அண்ணாந்து நோக்க அகன்றதோர் ஆகாயம்
வெண்ணிலவு கண்சிமிட்டும் அதனருகே
விண்மீன்கள் விழியுயர்த்தச் செய்யும்
வியப்போ வியப்பு விண்ணழகு!

காலாற நடந்தே காணுகிறேன் காடுகரை
காய்கனிகள் கண்குளிர மலர்செடிகள்
அத்தனையும் விதவிதமாய் அனுதினமும்
நமக்கே நன்கொடையாம் நாருசிக்க

உதவிடுதே நம்முயிர் காக்க உச்சி
மரத்தினில் தேனீக்கள் - மாமருந்தாம் மதுரத்தேன்
ஆவினங்கள் அன்றாடம் பால் தந்திடும்
அருமையாய் ஆரோக்கியம் நாம்பேண!

எண்ணியெண்ணி வியக்கிறேன்
இயற்கையின் அற்புதம் எல்லையற்றே!
இயம்பிட இயலாததன் தானம்
ஏங்குகிறேன் நானும் இயற்கைபோல்

இசைந்தே ஈந்திட இயன்றளவு
கல்வியோடு அன்னதானம் ரத்ததானம்
கரையாத கருத்தோடு - இன்னுடல்
மண்ணோடும் நெருப்போடும் மாய்ந்து போகாமல்

மருத்துவ மாணவரும் பயின்றிடட்டும்
தம் அறிவைப் பெருக்கிடட்டும்
உடல் உறுப்பு தானம் செய்வோம் - இவ்
வுலகில் உயிரினை தொடரச் செய்வோம்.....!



**அகநம்பி (எ) பாலசுப்பிரமணியம்**
தினத்தந்தி நிரூபர், கல்பாக்கம்.
கோசலை நினைவு கல்வி அறக்கட்டளை
இயற்கை சக்தி பப்ளிகேஷன்ஸ்,
புன்னமை கிராமம், சீவாடி கிராமம் & அஞ்சல்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்: 9585480754

## மனயிருள்!

குழந்தைகளின்...
கண்ணாமுச்சி விளையாட்டை
குடும்பத்துடன் ரசிக்கும்
வீட்டில்
கண்டுபிடிக்க முடியவில்லை
யாராலும்
தனித்தனியறைகளில்
அடைந்து கிடக்கும்
உறவுகளின் மனயிருளில்
என்ன
ஒளிந்துயிருக்குயென்று?

## காணிக்கை!

மணமகள் அழுதாள்...
விட்டுபிரிந்த
தாய் தந்தையரை நினைத்து
மணமகனும் அழுதான்...
விலகிநிற்கும்
சொந்தங்களை நினைத்து
காணிக்கையாக்குகிறார்கள்...
இருவருமே
சாதி மதங்களை கடந்து
கரம் பிடித்த மணநாளில்
காதலுக்கு கண்ணீரை!



**ஜெ. புதுயுகம்**
2/387, தருமத்தோப்புத் தெரு,
பண்ணந்தூர் (PO) 635123,
கிருஷ்ணகிரி (DT).
செல் : 9566580012

# 50 புதிய பொது நீதிச் சுதந்திரப் போர் வெடிக்கட்டும்.....

என்ன தீய வறுமை
என்ன ரராஜ மேன்மை
என்ன சர்வ கொடுமை
இதுவா என் தேசம்?
ச்சீ!....... த்தூ......

எங்கும் பண வெறி
எங்கும் வழிப்பறி
அரசியல்வாதிகள் முன்னோடி
அதிகாரிகள் பின்னோடி
பொதுமக்கள் அடுத்தபடி
எங்கே நீதி நெறி?
அநீதியோ அத்துமீறி!.....

விருதுக்காகவோ,
விருந்திற்காகவோ, வியாபாரத்திற்காகவோ
எழுதவில்லை......
பொதுநீதியின்
இலட்சியத்திற்காக எழுகிறேன்!

திருந்தாத - தீயவர்களை
திருடர்களாய் பார்த்து
சும்மா இருக்க - நான்
குருடனில்லை! மூடனில்லை!

நாடு தான்
நம் வீடு - அது
மேம்பாடு பெற போராடு!

தூசிகளை, குப்பைகளை
கழிவுகளை, ஒட்டடைகளை
விளக்கமாற்றால் அடித்து விரட்டி.....
பொதுநீதி விளக்கேற்றி
வீட்டைப் புனிதப் படுத்து!

மக்குகளாய்-
மக்கள் இருப்பதினால்
மாக்களாய் - காலிகள் - நாற்காலிகளுக்கு
ஆடு புலி ஆட்டம் ஆடுகின்றனர்!
கவர்ச்சி வலை எரித்து -
வளர்ச்சி வரலாற்றில் பாய்வோம்!

அரசியல் சாக்கடை மட்டுமல்ல....
அது ஒரு கொள்ளை நோய்!
பொதுநீதி நன் மருத்துவத்தால்
அதை விரட்டி ஒழிப்போம்!

அரசியல் என்றால் திருடுதலா?
அரசு என்றால் ஊழலா?
அரசியல் நல்லவனையும்
அயோக்கியனாய் மாற்றிவிடும்!

..... கமிஷன் கூட
திருடுதல் கமிஷன் ஆனதென்ன பெருங்கொடுமை!
தேறுமா இந்தத் தேசம்?.....

பொதுநீதி மக்கள் கல்வியுடமைத்
தேர்வுத் தேர்தல் முறையைக் கொண்டு வருவோம்!

நாட்டை, நீதியை மறந்து
நோட்டுக்கு ஓட்டுப் போட்டு....
ஓட்டாண்டி ஆனதுதான் மிச்சம்!

ஓட்டை வாங்கி, வாங்கி - நாடும்
ஓட்டையாகி - செல்வமெல்லாம்
ஓட்டப்பட்டு விட்டது - வெளி நாட்டுக்கு....

இது நாடா திருவோடு!
இது நாடா சுடுகாடு!

அறியாத - இந்த
அப்பாவி மக்களிடம்
அதிகாரம் ஒரு கேடா?
படை பலம் ஒரு கேடா? அயோக்கியத் தனம் ஒரு திறமையா?
ஏழை மக்களே எழுந்து வாருங்கள்...

இனி,
எதிர்காலத்தை நமக்காக இயக்குவோம்!

இங்கு,
முதலாளிக்கு ஏற்றம் -
பாட்டாளிக்கு ஏக்கம்!
இனி, வறண்ட வயல்வெளியில் மக்கள் மன்றம்
கூட்டுவோம்!
அடித்தள மக்களுக்கான - ஏழைக்கான
பொதுநீதி அரசு மட்டுமே அமைப்போம்!

இதுவரை கல்வி இங்கு
தோல்வியாகவும், கேள்வியாகவும் தான்
போனதே தவிர...
பொது நீதியிடம் - சரியான
வெற்றிகரமான பதிலைத் தரமுடியவில்லை!

படித்தவனும் - படிக்காதவனும்
நாட்டைக் கெடுக்கலாமா?
நீதியை - அநீதி ஆள்வதா?
பொதுநீதி -
ஒழுக்கப் புரட்சி வெடிக்கட்டும்!

இந்தச் சனநாயக நாட்டில்
'சனம்' - நாயாகவும் -
'பணம்' - நாயகமாகவும்
ஆனதென்ன கொடுமை!

பணம்!
பண்ணும் எல்லாவற்றையும் நம் பக்கம்!
பணத்திற்காக இப்படியா பணிவது -
பதவிக்காக இப்படியா தவிப்பது?

நீதிநிலைமை கெட்டுப் போனதால்...
நீர் வளமையும் பட்டுப் போனது!

கங்கை - குமரி கை கோர்க்கட்டும்!
சாதி, மத, அரசியல்
தீய பகை வெளியேறட்டும்!
நாட்டைச் சுற்றி

கடல் இருப்பதுபோல்...
கடன் இருப்பது நமக்குப் பெருமையோ!...
மூட நம்பிக்கையால்
கேடு கெட்ட - இந்த
நாட்டையும், தெய்வங்களையும்,
மக்களையும் சுத்தப்படுத்த
கடல் நீரும் போதாதோ!...

தரித்திரம் தான்
நாட்டின் சரித்திரமா?
தந்திரம் தான்
அரசியலின் தார்மீகமா?
அரசியல் சந்தர்ப்ப வாதிகளைப் பார்த்து...
சந்தி மட்டுமல்ல -
சகலமும் கை கொட்டிச் சிரிக்கிறது!

அன்னை நாடு விற்கப்பட்டு
அந்நிய நாடாகி விடுமோ?
உண்மையான தேசபக்தர்கள் - உழைப்பாளிகள்
உறங்கிக் கொண்டிருந்தால்...
என்ன நடக்குமோ? எப்படி விடியுமோ?
முதல் - சுதந்திரம் - அரசியல்
முதலைகளிடம் சிக்கிக் கொண்டதால்...
புதிய உண்மையான
பொதுநீதிச் சுதந்திரத்திற்கான
புனிதப் போர் வெடிக்கட்டும்!....



**எஸ். கர்ணன்** (கருணை வசந்தன்)
2, தரைதளம், M.A. K. வஹாப் பில்டிங்,
சுப்பிரமணியர் கோவில்தெரு,
பேரையூர் (TK), மதுரை(DT) 625703.
செல் : 9976478299

# 51 மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

**(எண் சீர் விருத்தம்)**

இதமான வாழ்விற்கு வழியா யில்லை
    இணக்கமாக பண்பினில்தான் நீங்கும் தொல்லை
உதயமாகும் எண்ணங்கள் உண்மை யென்றால்
    உள்ளமும்பால் வண்ணமுமாய்த் துலங்கும் நன்றாய்
பதமான அருட்பார்வை காட்டி நிற்பின்
    பகைமைநீங்கி நட்புறவு கூடி நிற்கும்
புதுவாழ்வில் மனிதநேயம் போற்றிக் காப்போம்
    புவிமீதில் நல்லவண்ணம் வாழ்ந்து பார்ப்போம்.

அன்புதானே புன்னகைக்கு வழியும் சொல்லும்
    அதிலென்ன சங்கடங்கள் நமக்குத் தோன்றும்
அன்புதானே பகைவிரட்டும் அமைதி கூட்டும்
    ஆங்கவர்க்கும் அருள்புரிந்து புதுமை காண்போம்
அன்புதானே அரவணைக்கப் பாடம் சொல்லும்
    அனைவரையும் ஒருநிலைக்குள் வைத்துப் பார்ப்போம்
அன்புதானே நட்பாக்கும் நன்று தேர்வோம்
    அகமகிழ்ந்து புதுவாழ்வு வாழ்ந்து பார்ப்போம்.

பூட்டுகின்ற மாலைதன்னில் மலர்க ளெல்லாம்
    பொல்லாங்காய் ஒன்றையொன்று நினைப்ப தில்லை
கூட்டுகின்ற காக்கையினக் கூட்டம் தன்னில்
    குத்துமில்லை கொலையுமில்லை கொடுமை யில்லை
தீட்டுகுணம் எங்கிருந்தோ இவனி டத்தில்
    தீவிரமாய்த் தொற்றியதோ தெரிய வில்லை
நாட்டுகின்ற சமத்துவத்தில் நாமெல் லாரும்
    நல்லவண்ணம் புதுவாழ்வு வாழ்ந்து பார்ப்போம்.

(வேறு)

வதைத்த போதும் பொறுத்த ஏசுவாய்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

போதி மரத்துப் புத்தன் கொள்கை
பாதி அளவினும் பற்றுதல் வேண்டும்

முற்றிலும் மாய்ந்திட முதியோர் இல்லம்
பெற்றவர் களித்திடப் பேணுதல் வேண்டும்

வேண்டிய மட்டும் ஈட்டிய பொருளை
வேண்டுவோர் குளிர விரும்பிக் கொடுப்போம்

ஆற்றல் படைத்தவர் அயலவர் எனினும்
மாற்ற மிலாது மாலை சூட்டுவோம்

கண்ணில் கருத்தில் களிப்பினைக் கூட்டினால்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வேமே!

**முதல் பரிசு பெற்ற கவிதை**

## நலம்



'பாவாணன்'
முனைவர் **கி. கிருட்டினசாமி**
முதுகலைத் தமிழாசிரியர்,
அணுவாற்றல் மேனிலைப் பள்ளி,
அணுவிஜய் நகரியம் - 627120, இராதாபுரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.
அலைபேசி : **9444690607**

# 52 இளைஞனே கவிதை எழுது!

சிந்தனை சிறகடிக்கும் பருவம் இது
சிறுமைதனை களைந்திட சபதம் எடு!
சீரழியும் சமுதாயம் தலைநிமிர
சிந்தித்து சீர்திருத்த கவிதை எழுது!

மடமையில் மூழ்கிவிட்ட மக்களெல்லாம்
மறுமலர்ச்சி கண்டிட கவிதை எழுது!
மண்ணில் புதைந்துவிட்ட மனிதநேயம்
மறுஜென்மம் எடுத்திடவும் கவிதை எழுது!

வெட்டிப்பேச்சாலே வீணாகிப் போவோரை
தட்டிக்கேட்டு தரமான கவிதை எழுது!
கொட்டிக்கிடக்கின்ற கொடுமைகளையெல்லாம்
சுட்டிக்காட்டி துணிவாக கவிதை எழுது!

காதல் மணம் பரப்பும் கருத்துகளை
கண்ணியமாய் சொல்லி கவிதை எழுது!
காதல் போதையிலே காணாமல் போவோரை
கரை சேர்த்திடவும் நீ கவிதை எழுது!

உழைத்து களைத்திட்ட பாமரனும்
உற்சாகம் பெற்றிடவும் கவிதை எழுது!
உழைப்பையே அறியா உதவாக்கரைகளும்
உருப்படுவதற்கு உன்னத கவிதை எழுது!

பிறப்பில் பிரிவினை காண்பதெல்லாம்
சிறப்பில்லை எனக்கூறி கவிதை எழுது!
இறந்தாலும் உன் எழுத்துக்கள் சாகாது
உறக்கத்தை மறந்து உயிருள்ள கவிதை எழுது!

ஆங்கில மோகத்தால் அருந்தமிழை மறக்கின்ற
அறியாமையினையை அகற்றிடவும் கவிதை எழுது!
ஆயிரம் மொழிகள் அணிவகுத்து வந்தாலும்
அன்னைத் தமிழே முதலென்று கவிதை எழுது!

எட்டுத்திக்கும் தமிழ்க்கவியாலே தூதுவிடு
எளியனுக்கும் இனிய கவி விருந்துகொடு!
எழுச்சிக்கவியாலே ஏழைகளின் மனதைத்தொடு
எழுத்துலகில் என்றும் நீ இறவாப்பிறவி எடு!



கவிஞர். **க. சுகுமாறன்**
4031, பொன்னகர், அசோக்நகர் விரிவாக்கம்,
திருக்கட்டளை அஞ்சல்,
புதுக்கோட்டை - 622303.
அலைபேசி : 9486954801

# 53 ஆனாலும் கூட

குறிஞ்சிப்பூவாய்
பூக்கிறது வாழ்க்கை
நீண்ட நெடிய
நாட்களின் முடிவில்
கருவுற்றிருந்த
வசந்த காலத்தின்
ஒரே நேர்கோட்டில்

ஆனாலும் கூட

நம்பிக்கையின்மையின்
பலகீனத்தினின்று
வெளிப்படும்
இயலாமையின் குறியீடுகள்
வெறுப்பின் நெருப்பாய்
உமிழத்தான் செய்கின்றன

நிறைவேறாத
உள்ளக் குமுறல்கள்
நிலாமுற்றத்தின்
அமாவாசை வெளிச்சமாய்
அடிமனதில் கிடக்கின்றன

கல்லிடை வேர்களாய்
நம்பிக்கையின் விதைகள்
முயன்று கொண்டேயிருக்கின்றன
மண் நிலம் நோக்கி,
பாறைகளின் உயரம் தெரியாமல்



**இதயநிலவன்**
ஸ்ரீசாய்ராம் பவனம்,
411/A1, அண்ணாமலை நகர்,
3-வது தெரு, தேனி சாலை,
கொடுவிலார்பட்டி, தேனி - 25604.
அலைபேசி : 9659716121

# உயிரில் உறைந்த தமிழே! 54

❖ உயிரெழுத்தில்
உருக் கொண்டு
மெய்யெழுத்தில்
கருக் கொண்டு
கற்கண்டு
சொற்கொண்டு
கசியும்
கவித்தேன் கொண்டு
தலைக்கனமில்லா
இலக்கணம் கொண்டு
எழில் கொஞ்சும்
எண்ணிரண்டு
வயது கொண்டு
என்றும் வண்டாடும்
வண்ணத் தமிழே!
நான் கொண்டாடும்
கொங்கு தமிழே!

❖ சங்கத் தமிழே!
சங்கம் தனை
அங்கமாய் வளர்த்த
தங்கத் தமிழே!

❖ தமிழ்ப் பாட்டன் பாரதி
மூச்சில் கனன்ற
வீரத் தமிழே!
விஞ்ஞானத் தமிழே!

❖ கலைகளோடு விளையாடும்
காவியத் தமிழே!
கன்னித் தமிழே!

❖ சிந்தை சிறகை
சிலையாக்கி சிரிக்கும்
சிங்காரத் தமிழே!

❖ என் பேச்சினில் நிறைந்த
பிள்ளைத் தமிழே!
என் மூச்சினில் கலந்த
முத்தமிழே!

❖ பேச்சாய், மூச்சில்
என் உயிரில் உறைந்த
உன்னத தமிழே!
உன்னாலே
நான் முக்தி பெற வேண்டும்!
உனக்குள்ளே
நான் முக்தியடைய வேண்டும்!

தமிழ்த்தோழி **ச. விஜயரோகிணி**
க/பெ. பொ. பாண்டி,
29/40, பொன்மதி இல்லம்,
புத்தர் பள்ளி கிழக்குத் தெரு,
பேடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.
செல் : 9788145243



# 55 விரல்கள் செய்த விந்தை

❖ உளியால் உயிர்ப்பெற்று சிக்கல் தீர்ந்ததுண்டு
- கள்ளத்தனமாய்
சிலை வடித்த மகன் உசுரும் குருதட்சணை இங்கு
தந்தைக்கும் மகன் உபதேசித்த சிற்பக்கலை சாத்திரம்
உண்டு
நம் சரித்திரம் பகர்கின்ற சாண்டில்யமாய்

❖ கடலோரம் கற்கோவில் கவிப்பாடுது - கவி கேட்டு
பஞ்ச இரதம் எழுந்தாடுது - விஸ்வகர்மேசம் ஆரூரில்
பொழிந்தானது - செம்பியம் சிதறாமல் நினைவானது,
தெய்வீக சிற்பங்கள் அத்திரி வணம் ஆகாய கங்கையில்
இன்றும் நீராடுது - காபோஜம் வியந்து குலம் நதி இறை
செய்தது

❖ சங்கீத லயமாக தாரகேசுவரமே!
தமிழாக நிமிர்ந்த பிரகதீச்சுவரமே!
தமிழ் செய்த தவமாக சோழபுரமே! - கலைக்காக
தமிழே தவம் செய்த தேவிப்பட்டினமே!
உயர் கலையின் உயிரோட்டம் பரணி கரை நெடுக,
இதுவே இங்ஙனம் - ஆதிச்சநல்லூர் குமரி கண்டம்
எங்கனமோ?

❖ இதுவெல்லாம் சிற்பங்களா...?
குடிமியான் மலை சிற்பங்கள் இராவில் சிரித்தாடுது,
பெண்ணீயம் புகழ் உரைத்த பூம்புகார் கலை செல்வமே!
கூடல் மாநகரில் தான் சிற்பக்கலை கொட்டிக்
கிடக்கே....?
இது.... கொற்கை தாண்டயில் 'அகலிகை' - ஊற்றும்
பொற்த்தாமரை குளமாக மாறியிருக்கு - காவல்கிணறும்
- திருமெய்யம் திருநெல்லை

கலையாண தோரணவாயிலும் காணலையே....?
அங்கே தான் கிடக்கு

❖ பாரத சிற்பகலைகள் ஒருமித்த குமரி எழில் பூமியில்
தமிழ் அன்னை அணிய கலைநய கால்தண்டை
சுசீந்திரத்திலே!
இதுபோதும் சிற்பக்கலைக்கு சிறு பதமே!
அவள் கண்ணாடிப் பார்த்து திலகமிட கட்டிய
புடவைக்கு விலை ஏது கூற?
முத்தம் தரலாமா? என குனிய முகத்தில் இடித்தது
பக்கத்து
பக்த மீராவின் வீணை - யானை மீது அம்பாரி
1000 கால்
மண்டபம் போக - கம்பன் கவிநயம் இங்கு
தோற்றது போ...!

சிற்பியின் தீராத காதலால் பல அபிநய தூண்கள்
வெற்றிடமே!
அதை நிவர்த்திக்க நடக்குது - இன்றும்
நாட்டியாஞ்சலியே!
உளியாக பாவித்த ஒரு காதல் உள்ளத்தை வருடுது
- ஆரல் சித்தர் கிரியில்

கவிஞர் **அப்சரஸ் அ. இராஜேந்திரன்**
குலக்கால் தெரு, பள்ளத்தூர் - 620 107,
சிவகங்கை மாவட்டம்.
செல் : 73736 68984



# 56 இருட்டைக் கழுவும் எழுத்து

மாட்டேன்னு சொல்லாத மகராசா - பள்ளிக்கூடம்
போக மாட்டேன்னு சொல்லாத என் ராசா

ஆயுசு முச்சூடும் கும்பிட்டாலும் வாராத சாமியெல்லாம்
அ, ஆ சொல்லித்தர அங்க தான உக்காந்திருக்கு

பழநிச்சாமின்னு எம் பேரு மறந்து போச்சு
பட்டிக்காட்டான், கைநாட்டான்னே நிலைச்சு போச்சு

சோறுதான திங்கற சொன்னாப் புரியாதான்னு
பண்ணாடி திட்டறப்ப படிப்பு இல்லாட்டி
தின்ன சோறும் எனக்கு மாறித்தான் தோணுதய்யா

முதலாளி வீட்டில் மூட்டைத் தூக்கி வந்த கூனிது
நிமித்தி வைக்க நீதானய்ய வரவேணும்

இடுப்புக்கு கோவணம் கட்டி மானத்தை மறச்சேன்
என் மனசிருட்டுக்கு கோவணம் கட்ட
மவனே நீ பள்ளிக்கூடம் போடா



முனைவர் **ப. பாரதி**
உதவி பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி,
கோவை - 14.

# இதயத்துடிப்பை அறிவீரே..... 57

ஆயிரம் ஆயிரம் திட்டங்கள்
    அணி அணியாக வருகுதென்பார்
பாயும் ஆற்றின் நீர்ப்பெருக்கில்
    பாலும் தேனும் ஓடுமென்பார்
ஓயாது உரைக்கும் பொய்களினால்
    உல்லாசிகளாய் வலம் வருவார்
தாயவள் வருகையை எதிர்நோக்கும்
    தளிர் இளம் சேய்களின் உளம்போலே
வாய்ப்புகள் பலப்பல வருமென்றே
    வாடியிருக்கும் கொக்குகளாய்
ஏழ்மைச் சேற்றில் உழல்வோரின்
    இதயத்துடிப்பை யார் அறிவார்?
மழையின் கொடையாம் மாநதிகள்
    மலையில் பிறந்து கரம் விரிக்கும்
மண்ணில் தவழ்ந்து நடைபோட்டு
    மாநிலம் தழைக்கச் செழிப்பூட்டும்
இன்னல் களைந்து எல்லார்க்கும்
    இயற்கை இனிய வழிகாட்டும்
காரிருள் போக்கும் கதிரவனும்
    கனிமுகம் காட்டும் முழுநிலவும்
பாரினில் எவர்க்கும் பொதுவாகி
    பண்புப் போதனை புரிகையிலே
இடையில் தடையிடும் இழிகுணத்தோர்
    ஏற்றிட இயலா பதர்களன்றோ...!




கவிஞர் **யா. ஜெயரத்னம்**
அன்னை இல்லம்,
5A, இலக்குவனார் 2-வது குறுக்குத் தெரு,
திருநகர், மதுரை - 625 006.
அலைபேசி : 8903042564

58

# விழித்தெழம்மா

ஆதிக்க சமுதாயத்தின் அக்கிரமம் தீர்த்து
நீதியை நிலைநிறுத்தி நிர்வகிக்க வந்தவளே
நேரம் நெருங்குதம்மா நிமிர்ந்தெழுந்து நடத்திடம்மா
நியாயம் காத்து என்றும் நிலைத்த புகழ் எய்திடம்மா
பேசாமடந்தையென்றே பேசிச் சிறகொடிக்கும்
பிற்போக்குவாதிகளின் வேஷம் கலைக்கவந்த
முற்போக்கு வெளிச்சமே முழுவெண்ணிலவே
வீரக்கனல் வீசிடவே விழித்து எழுந்திடம்மா
நித்தம் சிறகொடித்து நிந்தனை பலபுரிந்து
நிறையழிக்க முயன்றுவரும் நீசர்களின் நிலையறிந்து
நெறிப்படுத்த வந்துதித்த நித்திலமே நிறைமனமே
நெருப்புமலராய் நீ நின்றெரிக்க விழித்தெழம்மா
கருவறையைக் கல்லறையாய் மாற்றும் கொடுமையினை
மறுத்துத் தடுக்கவந்த மதிநலமே அருமருந்தே
ஆண்குழந்தை பெண்குழந்தை அகலட்டும் பேதமென்றே
மறுமலர்ச்சி இசைபாட மண்மகளே விழித்தெழம்மா
மடமையை கொளுத்தாது மாதரையே கொளுத்திவிடும்
மடமை செயல்புரிவோர் மனங்களை உடைத்தெறிய
மண்ணில் அவதரித்த மாதர்குல அரசே
மண் விண் அதிர்ந்திட நீ மகத்துவமுடன் விழித்தெழம்மா
அன்பெனும் வாசல்களாம் அருந்தவப் பெண்குலத்தின்
ஆழ்மன நிலங்களிலே அடிமையெனும் விஷவித்தை
நட்டு வளர்த்துவரும் நாசக்கார சூரர்களை
நடுநடுங்கி ஓடவைக்கும் நம்பிக்கையே விழித்தெழம்மா



பேரா. **வாசுகி ஜெயரத்னம்**
அன்னை இல்லம்,
5A, இலக்குவனார் 2-வது குறுக்குத் தெரு,
திருநகர், மதுரை - 625 006.
அலைபேசி : 9442089315

# சமுதாயப் பணி

குடும்ப வாழ்வில் சிற்றளமை காலத்தில் தோன்னுற்ற
உடம்பாலும் இல்லறத்தில் பற்றி நின்ற சீரொழுக்கம்
திடமான தற்கட்டுப்பாட்டதனாலும் நாம் பெற்றோம்!
விடற்கரிய அப்பொருளோ டின்பமதின் பட்டறிவை!
அடைந்தோம்! உடல் மற்றும் நாம் குழம் புற்றுயாண்டும்
திடமிலா தலைந்து திரியுமுனம் பற்றியதை!
உடம்பினுள் துச்சிலிருக்கும் உயிர் மற்றும் அந்த
நுட்பமான மெய்ப்பொருள் அவ்விரண்டு நுட்புலங்கள்
நடமாடும் மாந்தரெனும் அவ்வியக்கம் தன்னில்
அடங்குற்ற! இவ்விரண்டை தானறிந்தால் மட்டுமே
படிறிலா முற்றறிவைப் பெற்றதாகும் அன்றோ!
படிறிலா இவ்வறிவை நல்லாசான் தன்னை சார்ந்து
நுட்பமாய் அவ்வுரியின் உள்ளிருப்பை ஓர்த்தபின்
உன் மனத்தை தாம் செலுத்தி உன்னக நோக்கான்
உள்ளகத்து அப்பயிற்சி கொண்டறி வீர்களாக!
உள்ளுயிர் உள்ளிருப்பியக்கும் விளைவுகளை
தெள்ளிதின் அறியுமந்த காலமது தானறிவீர்!
தள்ளா தவமேற்கொள் வானப் பிரத்தமாகும்!
உள்ளகத்துச் செய்தவத்தால் பெற்றிடுவீர் முற்றறிவு
உடலுயிர் ஈந்து நமை ஈந்த சமுதாயம்!
பட்டறிவால் கண்டுற்றோம் முழுமைத்தளவில்
உடலாற்றல் மற்றும் அறிவின் தெளிவை
திடம் நமக் குண்டாம் சமுதாய தொண்டாற்ற!
குடும்பம் பொருளுடைமை எல்லையைத் தாண்டி
படர்ந்து விரிந்துற்ற பார்வையில் நாம் இணைந்து
குடும்பம் பொருள் மக்கள் என்றுவந்த பற்று நீங்கி
பாடுபடலே நாம் பெற்ற முற்றறிவின் பேறாகும்.



**K. கோபால ரெத்தினம்**
90 மணிமுத்தாறு தெரு,
சிங்காரம் அவென்யூ,
கூத்தப்பாக்கம், கடலூர் - 607002.
அலைபேசி : 9381875400

# 60 என்றும் நீ என்னோடு தான்?

**(அடி எதுகை கலிப்பா)**

என்றும் நீ என்னோடு இருந்திடவே வேண்டுகின்றேன்!
நன்றெல்லாம் உன்னாலே நான்கொண்டேன் என்பதனால்.
என்றென்றும் இதயத்துன் வைத்துன்னைப் போற்றுகின்றேன்!
நன்றிதனைக் கொன்றார்க்கு நாவழுகும் என்பது போல்
உன் அன்பை மறந்திட்டால் ஊணுறக்கம் எனக்கேது?
சென்றிட்ட இடங்களுக்கு இறப்புகளே செய்வித்தாய்!
என் நெஞ்சே! அஞ்சேனே! என்னுடன் நீ இருப்பதனால்!
உன் அருளால், ஊரினிலே உயர்ந்து நானே நிற்கின்றேன்!
உன் எண்ணம், என் எண்ணம்! ஊருக்கே உரைத்திடுவேன்!
என் வாழ்வு தழைத்திடவே என் இதயம் நுழைந்திட்டாய்!
என்னென்று சொல்வதிதை! ஈடு இணை உனக்கில்லை!
உன் செயலால் உருமாறி, உலகிற்கே தெரிகின்றேன்!
உன்னாலே உழைக்கின்றேன்! எந்நாளும் உண்டன்றோ!
இன்சொல்லால், எனையேற்றி வைக்கின்றார் எண்ணற்றோர்!
என்னோடு நீ சேர, பொன்னேடு போற்றிடுதே?!
கொன்றிட்ட போதிலுமே கைவிடேனே கண்டிடுவாய்!
என்னுடலை விட்டகலா எல்லையினை நீதந்தாய்!
கன்றோடு பசுவிருத்தல் நிலையன்றோ நம் உறவு!
மன்றாடும் போதெல்லாம் மகிமைதான் உன்னாலே!
குன்றனைய கொள்கைகள் கொண்டன்றோ இயங்குகின்றாய்?!
உன் உரம்தான், என் அறிவை உச்சிக்கே சேர்ந்ததன்றோ?
உன் அறிவால் என் உறவு உயர்ந்தன்றோ நிற்கிறது!
தொன்றுதொட்டுத் துலங்குகிறாய்! தூமகனாய் விளங்குகிறாய்!
ஒன்றுபட்டு வாழ்வதிலே உண்டிங்க நன்மைகள் போல்,
நன்றிகெட்டு நானுன்னை விட்டகல மாட்டேனே!
'உன் இன்பம் உலகோர்க்கே' கிடைத்திடவே இறைஞ்சுகின்றேன்!
'தொன்தமிழே' தொழுகின்றேன்! தூயவனாய் மாற்றிவிடு!
என் தமிழை 'மணந்ததனால்' எனக்கில்லை மறுபிறப்பே!




**சோ.ம. செயராசன்**
20/51, அம்மன்நகர், மாச்சாம்பாளையம்,
சுந்தராபுரம், கோவை 641024.

## 61 தாய்

நம் பிறப்பின் ஆதாரம்,
அவள் பிறப்பின் அர்த்தம்
நாம் உலகில் காணும் முதல் உத்தமி
அவள் அமுதூட்டும் போது அமுதசுரபி!
பாலூட்டும் போது காமதேனு!
அவள் பிறந்தது முதல் இறக்கும் வரை
பொறுமை காக்கும் பொக்கிஷம்!

## 62 ஒத்திகை

பள்ளிக் குழந்தைகளே!
நீங்கள் சுமைதூக்கி பள்ளிக்குச் செல்வது பயிலத்தானா?
இல்லை, எதிர்கால சுமைகளைச் சுமப்பதற்கான ஒத்திகையா?

நேரு மாமா, உங்களை சிரிப்பின் மலர்களாகத் தானே
பார்க்க ஆசைப்பட்டார்!

ஆனால், நீங்களோ ஆட்டு மந்தைகளைப் போல,
கொட்டிலில் அடைந்து கிடக்கின்றீர்களே!

பள்ளிக்கும் வீட்டிற்கும் இடையே
உதைபந்தாய் மாறியது எப்போது?
நடுவில் ஓர் உலகம் இருப்பதை மறந்து போனீர்களே!

என்னதான் இருந்தாலும் உங்களைப் பார்க்க,
எங்களுக்குப் பொறாமையாகத்தான் இருக்கின்றது.

அந்தக் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம்
எங்களுக்குத் திரும்பி வராதா என்று.



**கரு. பழநியப்பன்**
1/207 R.M.K.M.S. வீதி ஆத்தங்குடி,
சிவகங்கை மாவட்டம் - 630101
செல் : 9443947301

63

# கலங்காதிரு மனமே....

**(கும்பகோணம் பள்ளிக்கூட தீவிபத்தை ஒட்டி)**

நாங்கள் எரிந்தோம், தீயனவற்றையும் எரித்தோம்,
ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுவதுதானே மரபு

பணத்தைக் கொடுத்துப் படித்ததல்ல,
உயிரைக் கொடுத்துக் கற்றபாடம்!
நாட்டில் இருப்பதில் பல கல்விச்சாலை அல்ல;
அதற்குப் பெயர் வேறு, விற்பனைச்சாலை!

எங்களை உட்காரச் சொல்லி ஆணையிட்ட ஆசிரியைகள்;
எரியும் நெருப்பைப் பார்த்து ஓடும் போது, ஓடாதீர்கள் என ஆணையிட
எங்களுக்கு வயதும் இல்லை, வாயும் இல்லை

உயிர்மேல் ஆசை அவர்களுக்கு மட்டும்தானா?
ஒரேநாளில் பள்ளிக் கூரைகள் எல்லாம் அகற்றப்பட்டன
நன்கு படித்த, பெரியவர்களால் செய்யமுடியாததை,
குறைந்த வயதுள்ள நாங்கள் ஒரே நாளில் செய்து முடித்தோம்
உலகச் சாதனை அல்லவா இது!

பெற்றோர்கள் பள்ளிக்கூடத்தினுள் நுழைய,
பல பள்ளிகளில் தடையேன் என இப்போது புரிகிறதா?
பல இரகசியங்கள் உள்ளே இருக்கின்றன,
அதை வெளிச்சம் போட்டுக் காட்டலே இந்த அக்னி வேள்வி!
தவமிருந்து பெற்றீர்கள்;
ஆனால், தவற விட்டீர்களே!
பிள்ளைவரம் கேட்டுப் பெற்றீர்;
ஆனால், இளம் வயதில் சாகாவரம் கேட்டீரா?
நெருப்பென்றால் சுடும் என சொன்ன தாயே!
உயிரே போகும் என்பதைச் சொல்ல மறந்தாயே!!



**கரு. பழநியப்பன்**
1/207 R.M.K.M.S. வீதி ஆத்தங்குடி,
சிவகங்கை மாவட்டம் - 630101.
செல் : 9443947301

# கவியரசு கண்ணதாசன் 64

இருபதாம் நூற்றாண்டின் இயற்கைக் கவிஞனே!
உன் நாவினில் கலைமகள் வீற்றிருந்தாளோ!

கடவுளை நம்பி நல்கவி யானவனே!
கண்ணனையே நினைத்துக் கண்ணதாசனாய்,
அரசவைக் கவியாய் வாழ்ந்தவனே!

உன் போதை மொழியால்,
பாமரனையும் மயங்க வைத்தவனே!

அர்த்தமுள்ள இந்து மதத்தை அர்த்தத்தோடு
எழுதியவனே!
இறப்பின் பின்னதைத் தெரிந்து கொள்ளத்தான்
இறந்து பார்த்தாயோ!

எனக்கு மட்டும் வரம் அளிக்கும் சக்தி இருந்திருந்தால்,
உனக்கு சாகா வரம் அளித்திருப்பேன்!

நீ மட்டும் நிரந்தரமானவனல்ல!
உன் கவிதைகளும் உலகில் என்றும் நிரந்தரமானவை
தான்!

**கரு. பழநியப்பன்**
1/207 R.M.K.M.S. வீதி ஆத்தங்குடி,
சிவகங்கை மாவட்டம் - 630101.
செல் : 9443947301



# 65 அம்மா, அப்பா, ஆசான் தெய்வம்!

**(மாதா, பிதா, குரு, தெய்வம்)**

கருவினில் சுமப்பவள் மாதா
கருத்தாய் வளர்ப்பவள் பிதா
கற்பிக்கும் கடவுள் குரு
கருத்துள்ள நண்பன் தெய்வம்!

நீரின்றி தாவரங்கள் மண்ணில் வளராது
வேரின்றி மரங்கள் பூமியில் நிற்காது
அன்பின்றி எதையும் நாம் பெறமுடியாது
அன்புதான் அம்மா இது பொய்யாகாது!

அன்பின் மறுபெயர் அம்மா
அறிவின் மறுபெயர் அப்பா
கல்வியின் மறுபெயர் ஆசான்
நட்பின் மறுபெயர் தெய்வம்!

அம்மாவால் நாம் அறிமுகம் ஆனோம்
அப்பாவால் நாம் அறிவைப் பெற்றோம்
ஆசானால் நாம் கல்வியைக் கற்றோம்
தெய்வத்தால் நாம் புகழ் பெறுவோமே!

துடுப்பில்லாத படகு கரை சேராது
கருத்தில்லாத மனிதனால் சாதிக்க இயலாது
இந்த நால்வரின் துணையின்றி
உலகில் நாம் வாழவே முடியாது!

நால்வரின் தயவில் நாம் சிறந்து
நால்வர் போற்றும்படி நாம் வளர்ந்து
நாடும் வீடும் நலம்பெறவே
நானிலத்தில் நன்முறையில் நாம் வாழ்வோமே!



- கவியாளர் தேவனூர் **ஆ.ச. செல்வராசு**
நெசவாளர் தெரு,
தி. தேவனூர் அஞ்சல்,
திருக்கோவலூர் - 605 752,
விழுப்புரம் மாவட்டம்.
அலைபேசி: 8883350592

# உலகத்தின் வேலியே நாங்கள் தான்

66

வெண்மேகம் நினைத்தது
சந்திர சூரியரும், விண்மீன்களும், பிற கோள்களும்
வானத்தை தொட்டதில்லையாமே!
நாம் ஏன் இவர்களை முந்திக் கொண்டு
வானத்தைத் தொட்டுவிடக் கூடாது? என்றெண்ணி
காற்றின் மீதேறிக் கடும் வேகத்துடன்
ககன வெளியிலே மேல்நோக்கிப் போயிற்று
காற்றின் வேகம் குறைய வந்த வழியைத்
திரும்பிப் பார்த்து துணுக்குற்றது; அது
மின்னலாக மின்னிற்று,
வெண்ணிறமான தன்மேனி கருநிறமாய்
மாறிவிட்டதைக் கண்டு ஓவென ஓலமிட்டழுதது:
அது இடியாய் இடித்தது; ஓவென்று
கண்ணீர் விட்டுக் கதறியது; அது
கனமழையாய்ப் பொழிந்தது; மழையில்
மச்சுவீட்டில் மனைவி மக்களுடன்
மகிழ்வோடிருந்தனர் மேல்தட்டு மக்கள்.
கீழ்தட்டு மக்கள்? அவர்களே சொல்வதைக் கேளுங்கள்

குச்சு வீடுதான் எங்கள் குடியிருப்பு
பத்தடிக்கு எட்டடி; நில வாடகை
வீட்டின் நடுவில் ஒரு பழைய கித்தான் திரை
ஒரு பக்கத்தில் எங்களைப் பெற்றவர்கள்
மறுபக்கம் நானும் என் மனைவியும்
உறங்கவும், உறவுக்கும், பிறப்புக்கும்
இறப்புக்கும் அதே இடம்தான்.
வெளியில் மழையென்றால் எங்கள் வீட்டில்

ஆங்காங்கே நீர் கொட்டும், கொட்டு மிடமெங்கும்
பண்ட பாத்திரங்களையும், சட்டிகளையும்
வைத்துவிட்டு மழைகொட்டாத இடத்தில்
நாம் ஒதுங்கிக் கொள்ளுவோம்.
கழிப்பதற்கும் குளிப்பதற்கும் வெட்டவெளிதான்
உதயத்திற்கு முன்னர் இருட்டிலேயே
காலைக்கடனை முடித்துக் கொண்டு
இரவு செய்த ராகிக் களிக்கு சட்டியில்
நீருற்றி வைத்திருப்போம்; அந்த நீரிலேயே
கரைத்து, வெங்காயமும் பச்சை மிளகாயும்
தங்கம் போலக் கடித்துக் கொண்டு குடிப்போம்
வயிறு நிரம்பியதும் எட்டு மணிக்கெல்லாம்
மகாத்மாவின் பெயரால் நூறு நாள்
வேலைத் திட்டத்தில் பணியாற்றப் போவோம்
எங்கள் உழைப்பில் பங்கு போட்டது போக
மீதியைத் தருவார்கள் கூலியாக
நாங்கள் ஏழைகள் தான்; ஆனால்
நாங்கள் கோழைகள் அல்ல; இந்த
உலகத்தின் வேலியே நாங்கள் தான்.

ஒண்டிப்புதூர், கவிஞர் **மு. நடராசன்**
எண் - 14, கொலோ ராடோ அவென்யூ,
திரீஸ்டார் திரிலோக் ஸ்கான்டெம்பிள் சாலை,
விமான நிலைய அஞ்சல்,
கோவை - 641014.
அலைபேசி : 9345890980
தொலைபேசி : 2977776



# இந்திய ஏவுகணையின் தந்தையே!

## ஆ.பெ.செ. அப்துல்கலாம்

தோன்றின் புகழோடு
தோன்றுக
இருந்தாலும் மறைந்தாலும்
பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று
ஊர் சொல்ல வேண்டும்
கட்சி இல்லை
கொடி இல்லை
தொண்டர் இல்லை
ஆனால் ஒரு
மிகப் பெரிய
மக்கள் அலை.
அன்பு, பண்பு, படிப்பு
உழைப்பு, உயர்வு
நாட்டுக்கே தன்னை
அர்ப்பணித்ததில் தான்
உயர்வு
கல்வியில் அவன் விஞ்ஞானி
வாழ்வில் அவன் மெய்ஞானி
அக்னிச் சிறகுகள்
அவன் விரித்தான்
என்றும் குழந்தையைப்
போலவே சிரித்தானே
ஏழ்மையில் பிறந்து
ஏற்றங்கள் பெற்று
ஏவுகணைகள்
உருவாக்கி
எல்லோரர் இதயங்களில்
ஏணியாக அமர்ந்து
நெஞ்சில் ஏற்றமும்
மாற்றமும் தந்த
கலாம் எனும்
கனிவான
அற்புதத் தலைவரை
இனி என்று உங்களை
நாங்கள் காண்போம்.
உலகின் எக்கோடிக்கும்
அறிமுகமாவாய்
என ஆசீர்வதித்தான்
பூச்செண்டாகிய
போனது!

இலக்கியத் தென்றல், இலக்கிய ஆய்வாளர்
கவிஞர் **கே.ஏ. ஜெஹபர் உசேன்**
தபால் பெட்டி எண் : 24,
32, மேலத் தெரு, கூத்தாநல்லூர் 614 101,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
அலைபேசி : 91+9597194442, 91+9790558115.
மெயில் : jahabarhussain786@gmail.com



நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 04652 - 233853